Registered as a News Paper  பக்கங்கள் 04  விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM  Peoples Daily  மக்கள் தினசரி

நாதம் 08  திருவள்ளுவர் ஆண்டு 2023  மார்கழி 01  (16-12-1992)  புதன்கிழமை  ஓசை 302

## ஆசிரியர் பயிற்சி கலாசாலை பரீட்சை திகதியில் குழப்பம்

1991 / 1992 ஆகிய காலப்பகுதிகளில் தங்கள் பயிற்சிகளை முடித்துக் கொண்டு வெளியேறவிருக்கும் ஆசிரியப் பயிலுனர்களுக்கான இறுதிப்பரீட்சைக்கான திகதி இன்னும் நிச்சயப்படுத்தப்படாத நிலையில் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் மொட்டையாக நேர அட்டவணையோ, அன்றி திகதியோ குறிப்பிடப்படாமல் அதிபரால் கொழும்பில் இருந்து எடுத்துவரப்பட்டு மாணவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் யாழ். கல்விப் பணிமனைச் செய்தியின்படி இம்மாதம் 28 ஆம் திகதி பரீட்சை என பத்திரிகைகளில் பிரசுரமானது. இது இவ்வாறிருக்க இலங்கை வானொலியில் (4 ஆம் பக்கம் பார்க்க)

# குடாநாடு மீதான பொருளாதார தடை தீவிரமாக்க அரசாங்கம் நடவடிக்கை

## இருதினங்களில் 'குமண' வரலாம்

யாழ் குடாநாட்டிற்குத் தேவையான ஒரு தொகுதி உணவு மற்றும் பொருள்களுடன் ''குமண'' கப்பல் கொழும்பில் இருந்து புறப்பட்டு நாளை மறுதினம் பருத்தித்துறையை வந்தடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இக்கப்பலில் 2000 மெற்றிக் தொன் மா, 50 பரல் மண்ணெண்ணெய், பாடசாலைப் பிள்ளைகளுக்கான சீரு (4 ஆம் பக்கம் பார்க்க)

## போருடன் பொருளாதார அழுத்தம்

[யாழ்ப்பாணம்]

யாழ். குடாநாட்டின் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடையையும், அத்தியாவசியப் பொருள்களின் விநியோகத்தில் கட்டுப்பாட்டையும் தீவிரமாகக் சிறிலங்கா அரசாங்கம் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இத் தீவிரமாக்கும் நடவடிக்கையானது, இனப்பிரச்சினைக்கு அரசு மேற்கொள்ள விரும்பும் இராணுவத் தீர்வின் ஓர் அம்சமாகவே மேற்கொள்ளப்படுவதாக மேலும் அறியவருகின்றது

அடுத்த ஆண்டின் ஆரம்பத்தில் இருந்து சிறிலங்கா அரசாங்கப் போரைத் தீவிரமாக்க திட்டமிட்டுள்ளதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

சுமார் இரண்டரை வருடங்களுக்கு மேலாக போரை நடத்திவரினும், இராணுவம் வெற்றிகளை ஈட்டமுடியாத நிலையில் மேலும் பொருளாதாரத் தடையை தீவிரமாக்குவதன் மூலம் இராணுவ ரீதியான வெற்றிகளை ஈட்டலாம் என சிறிலங்கா அரசாங்கம் நம்புவதாகத் தெரியவருகின்றது.

இதன் அடிப்படையிலேயே யாழ் குடாநாட்டிற்கான அத்தியாவசிய உணவுப் பொருள்களுடன் மற்றும் எரிபொருள் என்பனவற்றின் மீது தீவிர கட்டுப்பாடுகளை மேற்கொண்டுள்ளது. அத்தோடு அத்தியாவசிய சேவையான தபால் சேவையையும் முடக்கிவிடுவதில் அரசாங்கம் அக்கறை காட்டுவதாகத் தெரிகின்றது. இப் பொருளாதா [4 ஆம் பக்கம் பார்க்க]

## யாழ். கப்பல் சேவையை கட்டுப்படுத்த அரசு முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடா நாட்டுக்கான கடல் வழியான உணவு விநியோகத்தை துண்டிப்பதற்கு சிறிலங்கா அரசு பகீரதமுயற்சி செய்து வருகிறது.

இதன் முதல் கட்டமாக குடா நாட்டுக்கு அத்தியாவசிய உணவுப் பொருள்களை எடுத்து வரும் இரு கப்பல்களினதும் சேவையை இடைநிறுத்தி வைடபதற்கு அரசு முடிவு செய்திருக்கிறது. நிவாரணத்திற்கான ஒதுக்கீடு முடிவுற்றதால் இவ்வருடம் முடியும் வரை இவ்இரு கப்பல்களிலும் உணவுப் பொருள்கள் ஏற்றி யாழ் குடாவிற்கு அனுப்பப் பருக்கு அறிவித்துள்ளார்.

யாழ் மாவட்ட அரச உணவுக் களஞ்சியத்தில் ஏற்கனவே பற்றாககுறையாக இருக்கும் உணவுப் பொருள்களின் கையிருபபு தினந்தோறும் குறைவடைந்து வருகிறது.

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம் பெயர்ந்த மக்களுக்குரிய மார்கழி மாதத்திற்கான வாராந்த உலர் உணவு விநியோகம் இதுவரை ஆரமபிக்கப்படவில்லை தற்பொழுது பருத்தித்துறையில் தரித்து நிற்கும் குமாரி கப்ப

## உணவுக் கப்பல்களை நிறுத்த வேண்டாம்

### - அரச அதிபர் கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

யாழ். குடாநாட்டில் உண

குடாநாட்டுக்கான கப்பல் போக்குவரத்தை இடை

## பிரச்சினை தீர்க்க விரும்பின் புலிகளுடன் பேசவே வேண்டும்

### - தொண்டமான்

(கொழும்பு

''பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்று நாம் உண்மையிலேயே விரும்பினால் நாம் மிகமோசமான எதிரி என்று எண்ணுபவர்களுடன் கூடப் பேசவேண்டித்தான் வரும்'' என ''சண்டே-ரைம்ஸ்'' பத்திரிகைக்கு அமைச்சர் தொண்டமான் அளித்துள்ள பேட்டியில் தெரிவித்துள்ளார்.

பிரச்சினைக்கு தீர்வுகான புலிகளுடன் பேசவேண்டுமா? என்ற கேள்விககே அவர் இவ்வாறு விடையளித்தார்.

அவர் அப்பேட்டியில் மேலும்; ''சமஷ்டி அமைப்பை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோமா? இல்லையா? என்பதல்ல பிரச்சினை. அது பொருத்தமற்றது என்பது தான் எனது கருத்து. எந்தக் கட்சிகள் அல்லது எந்தக் குழுக்கள் சமஷ்டி அமைப்பை ஏற்றுக்கொள்கின்றன என்பதைவிடவும், இறுதி முடிவுக்கு மக்களிடம் செல்லவேண்டும் என்பதுவும், இது ஏற்றுக் கொள்பவர்களின் கைகளில் தங்கியுள்ளது அல்ல என்பதுவுமதான் சிக்கல்.

கட்சிகள் ஏற்றுக்கொள்கின்றனவோ இல்லையோ அரசிய

நடாத்தப்படவேண்டும் என்பதுடன் பாராளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பங்கு பெரும்பான்மையும் தேவை அப்பொழுதுதான் ஒற்றை ஆட்சி அமைப்பை மாற்றி சமஷ்டி அரசியலமைப்பை ஏற்படுத்த முடியும்.

சோவியத்யூனியன், யூகோஸ்லாவியா போன்ற நாடுகள் சீர்குலைந்திருப்பதும், இந்தியாவில் சமஷ்டி ஆட்சி கேள்விக்குரியதாகியிருப்பதும் கூட என்னைப் பாதிக்கவில்லை, எமது சொந்த நாட்டின் வரலாற்றைக்கொண்டே நான் இதனைக் கூறுகிறேன்.

40 களிலேயே சமஷ்டிக் கோரிக்கையை திரு. செல்வநாயகம் அவர்கள் முன்வைத்தபோது அதனை யாரும் ஏறெடுத்தும் பார்க்கவில்லை. 1972, 1978 ஆம் ஆண்டுகளின் புதிய அரசியலமைப்புகள் வரையப்பட்டபோதும் சமஷ்டிக் கோரிக்கை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. சமஷ்டிக்கு எதிரான பிரசாரமே இங்கு நடந்துள்ளது.

அரசாங்கம் சமஷ்டிக்கொள்கையை ஏற்றுக்கொள்வதாக இருக்கட்டும 50 ஆண்டுகளாக (4 ஆம் பக்கம் பார்க்க)

## இ.தொ.காங்கிரசில் பிளவு; தொண்டமான் மறுப்பு

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸிற்குள் பிளவு இருப்பதாக வெளிவந்த செய்திகளை அமைச்சர் தொண்டமான் வன்மையாக மறுத்துள்ளார். எனினும் சில தீயசக்திகள் அண்மைய வாரங்களில் கட்சியை விட்டு வெளியேறியிருப்பதாகத் தெரிவித்தார்.

படும் எனவும் குறிப்பிட்டார். மூன்று லட்சம் அங்கத்தவர்களைக் கொண்ட இ.தொ.கா. ஒரு சிலர் வெளியேறுவதால் பாதிக்கப்படாது என்றும், கடந்த ஐம்பதாண்டு காலமாக இ.தொ.கா.நிலைத்திருப்பதாகவும் தெரிவித்தார் அஸீஸ் பிரிந்து சென்று ஐ.

ரங்களில் இருந்து தெரியவருகின்றது.

சுமார் இரண்டரை வருடங்களுக்கு மேலாக போரை நடத்திவரினும், இராணுவம் வெற்றிகளை ஈட்டமுடியாத நிலையில் மேலும் பொருளாதாரத் தடையை தீவிரமாக்குவதன் மூலம் இராணுவ ரீதியான வெற்றிகளை ஈட்டலாம் என சிறிலங்கா அரசாங்

# யாழ். கப்பல் சேவையை கட்டுப்படுத்த அரசு முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடா நாட்டுக்கான கடல் வழியான உணவு விநியோகத்தை துண்டிப்பதற்கு சிறிலங்கா அரசு பகீரதமுயற்சி செய்து வருகிறது.

இதன் முதல் கட்டமாக குடா நாட்டுக்கு அத்தியாவசிய உணவுப் பொருள்களை எடுத்து வரும் இரு கப்பல்களினதும் சேவையை இடைநிறுத்தி வைப்பதற்கு அரசு முடிவு செய்திருக்கிறது. நிவாரணத்திற்கான ஒதுக்கீடு முடிவுற்றதால் இவ்வருடம் முடியும் வரை இவ்இரு கப்பல்களிலும் உணவுப் பொருள்கள் ஏற்றி யாழ் குடாவிற்கு அனுப்பப்படமாட்டாது என்று அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் யாழ். அரசாங்க அதிபருக்கு அறிவித்துள்ளார்.

யாழ் மாவட்ட அரச உணவுக் களஞ்சியத்தில் ஏற்கனவே பற்றாககுறையாக இருக்கும் உணவுப் பொருள்களின் கையிருப்பு தினந்தோறும் குறைவடைந்து வருகிறது.

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம் பெயர்ந்த மக்களுக்குரிய மார்சழி மாதத்திற்கான வாராந்த உலர் உணவு விநியோகம் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை தற்பொழுது பருத்தித்துறையில் தரித்து நிற்கும் குமாரி கப்பலில் இருந்து இறக்கப்பட்டு வரும் உணவுப் பொருள்களை

(4 ஆம் பக்கம் பார்க்க)

# உணவுக் கப்பல்களை நிறுத்த வேண்டாம்

## - அரச அதிபர் கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

யாழ். குடாநாட்டில் உணவுப் பொருள்களின் கையிருப்பு நிலை மிகவும் மோசமாக இருப்பதால் குடாநாட்டிற்கு கடல் வழியான உணவுப் பொருள்களின் விநியோகத்தை நிறுத்த வேண்டாம்'' இவ்வாறு யாழ். அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளருக்கு அறிவித்துள்ளார்.

குடாநாட்டுக்கான கப்பல் போக்குவரத்தை இடைநிறுத்தி வைக்கப் போவதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் அரச அதிபருக்கு அறிவித்ததைத் தொடர்ந்து மேற்படி அவசர வானொலி அறிவித்தலை யாழ். அரசாங்க அதிபர் கா மாணிக்கவாசகர் அனுப்பி வைத்துள்ளார். மேலும கப்பல் மூலம் எடுத்து வரப்படும்

[4 ஆம் பக்கம் பார்க்க]

# போரூட் பிரதிநிதிகள் யாழ். வந்தனர்

[வடமராட்சி]

போரூட் பிரதிநிதிகள் இருவர் நேற்று காலை பருத்தித்துறையில் உள்ள வடமராட்சி போரூட் அலுவலகத்தை வந்து சேர்ந்தனர்.

போரூட் பிரதிநிதி திரு. போல் ஹென்றின் கோஸ்லன் மற்றும் கொழும்பு திட்ட முகாமையாளர் திரு. சற்குணராசா ஆகியோரே வந்தவர்களாவர்.

இவர்கள் நேற்று வடமராட்சிப் பிரதேசத்தில் போரூட் நிறுவனத்தினரால்மேற்கொள்ளப்பட்டு வந்த திட்ட நடவடிக்கைகள் மற்றும் வடமராட்சியில் போரூட் நிறுவனத்தினரால் பராமரிக்கப்பட்டு வரும் அகதி முகாம்களை பார்வையிட்டனர்.

இன்று யாழ்ப்பாணம் சென்று அங்கும தமது நிறுவனம் மேற்கொண்ட திட்ட நடவடிக்கைகளையும், அகதிமுகாம்களையும் பார்வையிடுவர். இவர்கள் யாழ். மாவட்டத்தில் மூன்று தினங்கள் தங்கியிருந்து தமது செயற்பாடுகள் திட்டங்கள் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்தாலோசனைகளை மேற் கொள்வர்.

## றொனி டீ மெல்

# அரசியல் எதிர்காலம் பற்றி தீர்மானிக்கவில்லையாம்

''நாட்டின் தலைவர்களையும், மக்களையும் மகாசங்கத்தினரையும் சந்தித்ததன் பின்னரே எனது வருங்கால அரசியல் நடவடிக்கைகள் குறித்து நான் முடிவு செய்வேன்'' இவ்வாறு முன்னாள் நிதியமைச்சர் திரு றொனி டீ மெல் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் லண்டனில் இருந்து நாடு திரும்பிய அவர் செய்தி நிருபர்களிடம் பேசும் போது இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் பேசும் போது இன்று எமக்குத் தேவைப்படுவது சமாதானம், நல்லெண்ணம், அபிவிருத்தி ஆகியவையே என்றும் திரு. றொனிடீமெல் தெரிவித்தார். நாடு திரும்பியதும் அரசின் உயர் அதிகாரிகளையும், ஐக்கிய தேசியக் கட்சியின் சில தலைவர்களையும் சந்தித்து உரையாடி வருவதாகவும் தெரியவருகிறது.

# எல்லை ராணுவத்தை மீளப்பெற்று தாக்குதலில்பயன்படுத்தமுடிவு

(கொழும்பு)

பாரிய இராணுவநடவடிக்கைகளை மேறகொள்வதற்கென எல்லைபபுறங்களிலுள்ள இராணுவத்தினர் மீளப் பெறப்பட்டுவருவதாக சிறிலங்கா பாதுகாப்புவட்டாரங் தெரிவித்தன.

இவ்வாறான இடங்களில் நிறுத்தப்பட்டுள்ள இராணுவத்தை விலக்கி அந்த இடத்திற்கு பொலிசார் மற்றும் ஊர்காவல் படையினரை சேவையில் ஈடுபடுத்தப் போவதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ்வாறு எல்லையில் பாதுகாபபிற்கு பெருமளவு இராணுவம் நிறுத்தப்பட்டுள்ளமையினால், பாரிய இராணுவ நடவடிக்கை எடுக்கமுடியாத நிலையில் இருப்பதாகவும் அவ் வட்டாரங்கள் மேலும தெரிவித்தன.

# நான்கு புக்காரா விமானங்கள் ஆஜன்ரீனாவில் கொள்வனவு

## டி. பி. விஜயதுங்க அறிவிப்பு

[கொழும்பு]

ஆஜன்ரீனாவிடமிருந்து நான்கு புக்காரா குண்டு வீச்சு விமானங்கள் கொள்வனவு செய்யப் பட்டுள்ளதாக சிறிலங்கா பாதுகாப்புஇராஜாங்க அமைச்சர் டி. பி விஜயதுங்க பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

வடக்குக் கிழக்கில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக நடைபெறும் யுத்தத்தில் தரைப்படையினருக்கு உதவும் முகமாகவும் விமானப்படைக்கு வலுவூட்டும் முகமாகவும் இவ்விமானங்கள் கொள்வனவு செய்யப்பட்டதாகஅவர் அங்கு தெரிவித்தார்.

மேலும் இந்நான்கு புக்காரா இன குண்டு வீச்சு விமானங்களையும் கொள்வனவு செய்வதற்கு இருபத்தெட்டுக் கோடி ரூபா செலுத்தப்பட்டுள்ளதாகவும் இவற்றுக்கு தேவையான உதிரிப்பாகங்கள் ஒருகோடி ரூபாவிற்கு கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த பாதுகாப்பு இராஜாங்கஅமைச்சர் இவ்உபகரணங்கள் 15 வருடங்களுக்கு பயன்படுத்தக்கூடியன எனவும் தெரிவித்தார்.

இதேவேளை இவ் விமானங்களை அரசு கொள்வனவு செய்தமைக்கு சிறிலங்கா விமானப்படையினர் கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக விமானப் படை உயர் அதிகா ஒருவர் கருத்து தெரிவிக்கையில 1966 ஆம் ஆண்டு போக்லண்ட் நாட்டுடன் நடைபெற்ற யுத்தத்திற்கு பயன்படுத்துவதற்கென பிரான்ஸ் இடம் இரு

(4 ஆம் பக்கம் பார்க்க)

# பலாலி இராணுவம்ஷெல்வீச்சு வல்வையில் ஆலயம் சேதம்

பலாலி சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்து வல்வெட்டித்துறைப் பகுதியை நோக்கி கடந்த ஞாயிற்றுக் கிழமை மேற்கொள்ளப்பட்ட எறிகணைத் தாக்குதலினால் வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில் சேதமடைந்துள்ளது.

இவ் ஆலயம் சேகமாக்கப் பட்டது குறித்து இவ் ஆலயத்தின் நிர்வாகத்தினர் யாழ் அரசாங்கஅதிபரிடம்முறையிட்டிருக்கின்றனர் இவ்வாறான தாக்குதல்கள்தொடர்ந்துமநிகழாமல் தடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதேவேளை சேதமாக்கப்பட்ட ஆலயத்தைப் புனரமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளுக்கு ஆவன செய்யும்படியும் அரச அதிபரிடம் கோரிக்கை விடுக்கப் பட்டிருக்கிறது.

பேட்டியில் தெரிவித்துள்ளார்.

பிரச்சினைக்கு தீர்வு கான புலிகளுடன் பேசவேண்டுமா? என்ற கேள்விககே அவர் இவ்வாறு விடையளித்தார்.

அவர் அப்பேட்டியில் மேலும்; ''சமஷ்டி அமைப்பை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோமா? இல்லையா? என்பதல்ல பிரச்சினை. அது பொருத்தமற்றது என்பது தான் எனது கருத்து எந்தக் கட்சிகள் அல்லது எந்தக்குழுக்கள் சமஷ்டி அமைப்பை ஏற்றுக்கொள்கின்றன என்பதை விடவும், இறுதி முடிவுக்கு மக்களிடம் செல்லவேண்டும் என்பதுவும், இது ஏற்றுக் கொள்பவர்களின் கைகளில் தங்கியுள்ளது அல்ல என்பதுவுமதான் சிக்கல்.

கட்சிகள் ஏற்றுக்கொள்கின்றனவோ இல்லையோ அரசியலமைப்பின் 83 ஆம் சரத்தின் படி இத்தகையதொரு தீர்வுக்கு சர்வசன வாக்கெடுப்பு

சோவியத்யூனியன், யூகோஸ்லாவியா போன்ற நாடுகள் சீர்குலைந்திருப்பதும், இந்தியாவில் சமஷ்டி ஆட்சி கேள்விக்குரியதாகியிருப்பதும்கூட என்னைப் பாதிக்கவில்லை, எமது சொந்த நாட்டின் வரலாற்றைக்கொண்டே நான் இதனைக் கூறுகிறேன்.

டிக் கோரிக்கை பரிசிலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. சமஷ்டிக்கு எதிரான பிரசாரமே இங்கு நடந்துள்ளது.

அரசாங்கம் சமஷ்டிக்கொள்கையை ஏற்றுக்கொள்வதாக இருக்கட்டும 50 ஆண்டுகளாக

(4 ஆம் பக்கம் பார்க்க)

# இ. தொ. காங்கிரசில் பிளவு; தொண்டமான் மறுப்பு

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸிற்குள் பிளவு இருப்பதாக வெளிவந்த செய்திகளை அமைச்சர் தொண்டமான் வன்மையாக மறுத்துள்ளார். எனினும் சில தீயசக்திகள் அண்மைய வாரங்களில் கட்சியை விட்டு வெளியேறியிருப்பதாகத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்; இத்தகைய தீயசக்திகள் வெளியேறுவதை இ. தொ. கா. ஊக்குவிக்கும் எனவும், அதன் மூலம் அமைப்பு தூய்மைப் படும் எனவும் குறிப்பிட்டார். மூன்று லட்சம் அங்கத்தவர்களைக் கொண்ட இ. தொ. கா. ஒரு சிலர் வெளியேறுவதால் பாதிக்கப்படாது என்றும், கடந்த ஐம்பதாண்டு காலமாக இ.தொ.கா.நிலைத்திருப்பதாகவும் தெரிவித்தார் அஸிஸ் பிரிந்து சென்று ஜ. தொ கா. என்ற அமைப்பை நிறுவிய போதுகூட இ. தொ. கா. தனது சொந்தப் பலத்தில் வளர்ந்தது என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

## கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி

# ஒப்பந்த உறுதிப்பத்திரம் மாணவருக்கு இல்லை

(யாழ்ப்பாணம்)

ஆசிரிய கலாசாலைகளில் அனுமதிக்கப்படும்போது பூர்த்தி செய்து மாணவர்கள் கொடுக்கவேண்டிய ஒப்பந்த உறுதிப்படிவம் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் அதிபரினால் இன்னும் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப் படுகிறது.

இப்பத்திரம் பூரணப்படுத்தப்படாவிட்டால் சம்பளம் இடைநிறுத்தப்படும் என்பது தெரிந்ததே.

இது இவ்வாறிருக்க கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் கொழும்பு சென்று அமைச்சில் கலந்துரையாடல் ஒன்றில் கலந்து கொண்டு யாழ்ப்பாணம் திரும்பியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மூன்று மாநிலங்களில்

# பாரதீய ஜனதா ஆட்சி கலைப்பு

(டில்லி)

பாரதிய ஜனதாக் கட்சி ஆட்சியிலிருந்த மூன்று மாநிலங்களின் அரசுகளை மத்திய அரசு கலைத்தது

ஹிமாசல் பிரதேஷ், ராஜஸ்தான், மத்தியபிரதேஷ் அரசுகள் ஜனாதிபதி நேற்றிரவு வெளியிட்ட பிரகடனம் ஒன்றின் மூலம் கலைக்கப்பட்டன. நேற்று மாலை கூடிய அமைச்சரவையே மூன்று அரசுகளையும் கலைக்கும்படி ஜனாதிபதிக்குப் பரிந்துரைத்தது.

## நிரந்தர நியமனம்

(கொழும்பு)

தொண்டர் ஆசிரியர்கள் அனைவருக்கும் ஆடித்தமாதம் முதல் நிரந்தர நியமனம் வழங்கப்படும்என்று கல்விச்சேவைகள் ஆணைக்குழு அறிவித்திருக்கிறது

இவ்வறிவித்தலை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் திரு.அஷ்ரப்பிற்கு அறிவித்துள்ளது.

## ஒலிபெருக்கிக்கு தடை

நிதி திரட்டுவதற்கு ஒலிபெருக்கியை உபயோகிக்க நவலங்கா சமசமாஜக்கட்சிக்கு அனுமதி வழங்கியிருந்த அரசு அந்த அனுமதியை ரத்துச் செய்துள்ளது.

## வரி விளம்பரம்


### கடிகாரமா? றேடியோவா

உங்கள் கடிகாரங்களை, றேடியோக்களை திருத்திக் கொள்ள எம்மை நாடுங்கள். சகல பணிக்கூடு பற்றறிகளும் எம்மிடம் உண்டு. DILKA WATCH & RADIO WORKS 284 ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகில்) யாழ்ப்பாணம். கிளை:- தென்மராட்சியில், டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் இலங்கை வங்கி அருகாமையில் சாவகச்சேரி. (சி-5588)

### கைச்சங்கிலி தவறிவிட்டது

தங்கக் கைச்சங்கிலி ஒன்று யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியில், புத்தூர், இருபாலைச் சந்தி, இருபாலை ஆரியகுளம், ஸ்ரான்லி றோட் ஆகியவற்றிற்குமிடையில் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (3782)

### இபில் இபில் விதை

அடுப்புக்கு விறகாகவும், கால்நடைக்குத் தீவனமாகவும் உதவும் இபில் இபில் விதைப் பைக்கற் ஒன்று பெற ரூபா 2/- பெறுமதியான அஞ்சல் முத்திரை சுய விலாசத்துடன் அனுப்பி வைக்கவும். ''மில்க்வைற்''. (சி/5581)

### தவறிவிட்டது

இல. 420410514 V என்ற அடையாள அட்டையுடனும் மிகத் தேவையான பற்றுச்சீட்டுகளுடனும் பேர்ஸ் ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சிவலிங்கன், 31, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம் என்ற முகவரியிலோ அல்லது ஈழநாதம் காரியாலயத்திலோ சமர்ப்பிக்கவும். (3793)


## சுருக்கெழுத்து தட்டெழுத்து பயிற்சி ஆரம்பம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கும் செஞ்சிலுவைச் சங்கக் கிளையினர் தட்டெழுத்து சுருக்கெழுத்து பயிற்சி நெறியொன்றினை ஆரம்பித்துள்ளனர்.

# வடமாகாண ஆஸ்பத்திரிகளில் சிறுவர் மரணம் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் இராணுவக் கட்டுப்பாடு தவிர்ந்த பிரதேசங்களில் இருக்கும் வைத்தியசாலைகளில் மேமாதத்திற்கும் நவம்பர் மாதமுடிவுக்கும் இடையே அனுமதிக்கப்பட்ட சுமார் 14, 416 குழந்தைகளில் 905 குழந்தைகள் மரணமடைந்துள்ளனர். பன்னிரண்டு வயதுக்கு உட்பட்ட இக் குழந்தைகளில் மலேரியா நோய் காரணமாக 140 பேரும், டயரியா நோய் காரணமாக 2,565 பேரும்வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இதில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் மட்டும் 6 080 பேர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டதாகவும், (மலேரியா நோயினால் 52 பேரும் டயரியா நோயினால் 1 264 பேரும்) இவர்களில் 306 பேர் மரணத்தைத் தழுவிக் கொண்டுள்ளனர் எனவும் புள்ளி விபரங்கள் மூலம் தெரிய வருகிறது.

மேலும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 3 460 பேர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டதாகவும் (மலேரியா- 26, டயரியா- 496) இவர்களில் 118 பேர் மரணத்தைத் தழுவிக்கொண்டதாகவும், கிளிநொச்சி மாவட்டத்தில் 2,760 பேர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டதாகவும் (மலேரியா-28 டயரியா- 580) இவர்களில் 316பேர் மரணத்தைத்தழுவியதாகவும், மன்னார் மாவட்டத்தில் 1 816 பேர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டதாகவும் (மலேரியா- 17 டயரியா- 170) இவர்களில் 89 பேர் மரணமடைந்ததாகவும், வவுனியா மாவட்டத்தில் 300 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் (மலேரியா-17 டயரியா- 65) இவர்களில் 76 பேர் மரணமடைந்ததாகவும் தெரிய வருகின்றது.

இவர்கள் அனைவரும் பன்னிரண்டு வயதுக்கு உட்பட்டவர்கள் என்பதும், இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் இருக்கும் வைத்தியசாலைகள் இங்கு சேர்க்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பரீட்சார்த்திகள் பாதிப்பு பிரேமாவிற்கு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த வாரம் சாவகச்சேரிப் பகுதியில் நடைபெற்ற க. பொ. த (சா/த) பரீட்சையின் பொழுது அதனை அண்டிய பகுதிகளில் சிறிலங்கா குண்டு வீச்சு விமானங்கள் நடத்திய அத்துமீறிய குண்டு வீச்சுத் தாக்குதலை யாழ். அரச அதிபர் ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார்.

மேற்படி விபரங்கள் அடங்கிய அவசர செய்தி ஒன்றை ஜனாதிபதிக்கு அவர் அனுப்பி வைத்துள்ளார்.

இச்செய்தியில் இராணுவத்தினரின் இந்த அத்து மீறிய செயலினால் மேற்படி பரீட்சார்த்திகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (பா)

## பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி ஷெல் வீச்சினால் சேதம்

(யாழ்ப்பாணம்)

பலாலி சிறிலங்கா இராணுவத்தினர் நள்ளிரவு வேளை மேற் கொண்ட எறிகணைத் தாக்குதல்களினால் பாடசாலை சேதமடைந்தது.

நேற்று முன்தினம் இரவு மேற்படி இராணுவ முகாமிலிருந்து பண்டத்தரிப்பு பகுதியை நோக்கி மேற் கொள்ளப்பட்ட எறிகணைத்தாக்குதல்களுக்கு இலக்காகி பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி பலத்த சேதமடைந்துள்ளது.

பாடசாலை கூரையின் மீது வீழ்ந்து வெடித்த எறிகணை ஒன்றினால் பாடசாலை அலுவலகம் அதனுடன் இணைந்த வகுப்பறைகளும் பலத்த சேதமடைந்ததுடன் தளபாடங்களும் சிதறிக்காணப்பட்டன.


THILEEPAN RESEARCH FELLOWSHIP FOR BIOTECHNOLOGY

Graduates/Post graduates are requested to apply for the above fellowship giving their biodata and research proposal in plant tissue culture and genetic engineering. The fellowship will be awarded to the most suitable applicant after an interview. A monthly allowance of Rs.2,500/- shall be paid.

The duration for this fellowship shall be one year and could be extended by reapplying for the fellowship. The fellowship may


## விலைகள் அதிகரிப்பு

(குருநகர்)

கிளாலிப்பாதைப் போக்குவரத்து இடை நிறுத்தப்பட்டதையடுத்து குடாநாட்டில் பொருள்களின்விலைகளில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக ம. எண்ணெய், தே. எண்ணெய்களின் விலைகள் நாளுக்கு நாளும் இடத்திற்கு இடமும் விலைகள் அதிகரித்த வண்ணம் இருக்கின்றன.

உபஉணவுப் பொருள்களின் விலைகளும் அதிகரித்து இருப்பது குறிப்பிடத்தக்கது. (21)

## புதிய வீதி அமைப்பு

(குருநகர்)

யாழ். நகரில் மேலும் ஒருபுதிய வீதி பொதுமக்களின் பாவனைக்காக நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ மன்றத்தினர் ''யுனிற்றஸ்ற்'' எனும் தலைப்பிலான கருத்தரங்கொன்றை யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் எதிர்வரும் 17ஆம் திகதி மாலை3 00 மணிக்கு நடாத்தவுள்ளனர்.

இக்கருத்தரங்கில் யாழ். இலங்கை வங்கி பிரதேச முகாமையாளரும் மற்றும் அதிகாரிகளும் கலந்து கொள்கின்றனர்.

## விசேட பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

இலக்கம் 21, யாழ். நவீன சந்தையில் அமைந்திருக்கும் மேற்படி சங்கப் பணிமனையில் நடைபெறவிருக்கும் இக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் தொழிற் சங்கப் பொறுப்பாளரான திரு. இ. இமையவன் அவர்களும் கலந்து கொள்வார் என்று அறிவிக்கப் பட்டிருக்கிறது.

## கொள்வனவு

(கிளிநொச்சி)

கிளிநொச்சிகரைச்சி தெற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் விவசாயிகளிடம் இருந்து 650/- ரூபா விலையில் நெல்கொள்வனவு செய்யப்பட்டு வருகின்றது. இதனால் நீண்டநாட்களாக நெல் சந்தைப்படுத்த முடியாது இருந்த விவசாயிகள் பெரும் நன்மை அடைவார்களென எதிர்பார்க்கப்படுகின்றது. (16)

## அரசாங்க கேள்வி மீளக் கோரல்

### சுகாதாரத் திணைக்களம்- யாழ்ப்பாணம்

1993ஆம் ஆண்டுக்கு பின்வரும் அரசினர் வைத்தியசாலைகளுக்கு பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்குவதற்கான கேள்விகள் மீளக் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரங்கள் 22-12-92 ந. ப. 12-00 மணிவரை இப் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் 23-12-92ஆம் திகதி மு. ப. 10-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு திறக்கப்படும். கேள்விதாரர் விரும்பினால் அச்சமயம் சமுகமளிக்கலாம்.

கேள்வி மீளக் கோரப்படும் நிறுவனங்கள் பின்வருமாறு:

(1) ம. ம. ம. ம., அம்பன்

(2) ம. ம. ம. ம., தர்மபுரம்

(3) ம. ம. ம. ம., மானிப்பாய்

(4) ம. ம. ம. ம., உருத்திரபுரம்.

வைத்தியகலாநிதி பொ. இரத்தினசபாபதி,

சுகாதாரசேவைகள் பிராந்திய பணிப்பாளர்


## இரகசியமாக இயங்கிய சிகரட் உற்பத்தி நிலையம்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில்இரகசியமாக இயங்கிவந்த கள்ளச்சிகரட் உற்பத்தி நிலையமொன்று பொலிசாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சம்மாந்துறைப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிசார் இதனை அண்மையில் கண்டுபிடித்தனர்.

நிந்தாவூர் பகுதியில் தேடுதல் வேட்டை ஒன்றைப்பொலிசார் நடத்தியபோது இத் தொழிற்சாலை கண்டுபிடிக்கப்பட்டதாகவும் இதிலிருந்த பொருள்கள் யாவும் தீயிடப்பட்டதாகவும்தெரியவருகிறது.

## 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



### வீரவேங்கை தேவதாஸ்

(யோசப்நாயகம் அன்ரன் தேவராஜா)

வீரஜனனம்: 17-03 1959 வீரச்சாவு: 16-12 1986

ஓராறு ஆண்டென்ன
ஓராயிரம் ஆண்டுகள்தான்
உருண்டோடிப் போனாலும்,
மாறுமோ உம் நினைவு,
வையத்தில் நாம் உள்ளவரை,
வாராது வந்த மாமணியே - உம்மேல்
தீராத காதல் கொண்டே
திடமுடன் நிற்கின்றோம் - நீங்கள்
ஏற்ற இலட்சியங்கள்
ஈடேற உழைக்கின்றோம்.

குருநகர்
யாழ்ப்பாணம். -குடும்பத்தினர்

(சி-5590)

## நினைவு கூருகின்றோம்...

### 1992-12-16

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில், மட்டு - கஞ்சிகுடிச்சாறுப் பகுதியில் தேசவிரோதிகளுடனான சமரில் வீரச்சாவெய்திய -

2-ம்லெப. கல்கி (சாமித்தம்பி குகநாதன் -காரைதீவு)

யாழ். குருநகரில் எதிர்பாராத விதமாக கைக்குண்டு வெடித்ததில் எமைப்பிரிந்த -

குருநகர்ப் பிரதேசப் பொறுப்பாளர் -

தேவதாஸ் (யோசப் அன்ரன் தேவராஜா 87, கடற்கரை வீதி, குருநகர் - யாழ்.)

மிகத் தேவையான பற்றுச்சீட்டுகளுடனும் பேர்ஸ் ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சிவலிங்கன், 31, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார் பண்ணை யாழ்ப்பாணம் என்ற முகவரியிலோ அல்லது ஈழநாதம் காரியாலயத்திலோ சமர்ப்பிக்கவும். (3793)

## சுருக்கெழுத்து தட்டெழுத்து பயிற்சி ஆரம்பம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கும் செஞ்சிலுவைச் சங்கக் கிளையினர் தட்டெழுத்து சுருக்கெழுத்து பயிற்சி நெறியொன்றினை ஆரம்பித்துள்ளனர்.

இதற்கென சுமார் இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியுடைய பதினைந்து தட்டெழுத்து இயந்திரங்கள் கொண்டு வரப்பட்டிருப்பதுடன் இரண்டு ஆசிரியர்களும் நியமனம் செய்யப்பட்டு உள்ளனர். 135 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு தற்சமயம் வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (16)

## புதுமுறிப்புக்குளம் புனரமைப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திலிருக்கும் பெரிய நீர்ப்பாசனக் குளங்களில் ஒன்றான புதுமுறிப்பு நீர்ப்பாசனக்குளம் 25,55,000 ரூபா செலவில் முற்றாகப் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

கடந்த வருடத்தின் காலபோக மழையின்போது இக்குளத்தின் கட்டு உடைப்பெடுக்கும் அபாயம் காணப்பட்டது தெரிந்ததே. இக்குளத்திலிருந்து கிடைக்கும் நீரினால் சுமார் ஆயிரம் ஏக்கர்நிலம் நீர்ப்பாசன வசதி பெறுவது குறிப்பிடத்தக்கது. (16)

## நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் சென்ற 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் யாழ். கில்னர் ஒழுங்கையில் உள்ள அமெரிக்கன் மிஷன் வித்தியாலயத்தில் நடைபெற்றது கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. சு. சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் மேற்படி சங்கத்தின் தலைவராக திரு. ஏ. பசுபதி, செயலாளராக திரு. க. வசந்தகுமார், பொருளாளராக திரு. க. கருணாநிதி ஆகியோருடன் எட்டுப்பேர் கொண்ட நிர்வாக சபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது. (22)

---

## THILEEPAN RESEARCH FELLOWSHIP FOR BIOTECHNOLOGY

Graduates/Post graduates are requested to apply for the above fellowship giving their biodata and research proposal in plant tissue culture and genetic engineering. The fellowship will be awarded to the most suitable applicant after an interview. A monthly allowance of Rs.2,500/- shall be paid.

The duration for this fellowship shall be one year and could be extended by reapplying for the fellowship. The fellowship may be terminated at any time if the project is not proceeding satisfactorily or the applicant's conduct is unsatisfactory.

The closing date for applications will be 1992 12 28.

REGISTRAR,
UNIVERSITY OF JAFFNA
1992-12-14. (சி-5593)

---

(குருநகர்)

கிளாலிப்பாதைப் போக்குவரத்து இடை நிறுத்தப்பட்டதையடுத்து குடாநாட்டில் பொருள்களின்விலைகளில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக ம. எண்ணெய், தே. எண்ணெய்களின் விலைகள் நாளுக்கு நாளும் இடத்திற்கு இடமும் விலைகள் அதிகரித்த வண்ணம் இருக்கின்றன.

உபஉணவுப் பொருள்களின் விலைகளும் அதிகரித்து இருப்பது குறிப்பிடத்தக்கது. (21)

## புதிய வீதி அமைப்பு

(குருநகர்)

யாழ். நகரில் மேலும் ஒருபுதிய வீதி பொதுமக்களின் பாவனைக்காக நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

யாழ்- பிரதான வீதி தண்ணீர்த் தாங்கிக்கு அருகாமையில் கடந்தகாலங்களில் ரயில் பாதை இருந்த மேற்படி இடத்தில் புதிய வீதி அமைக்கப்பட்டு வருகிறது

யாழ். ரயில் நிலையத்தில் இருந்து கிட்டங்கிக்கு பொருள்களை எடுத்து செல்லும் சரக்கு ரயில் மட்டுமே இப்பாதையில் சென்றது குறிப்பிடத்தக்கதாகும். (21)

---

## மலிவு விற்பனை

வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்குஇணங்க எங்கள் சேவை நீடிக்கப்பட்டுள்ளது

**15.12.1992 - 20.12.1992 வரை**

சாறி வகைகள், சைனிஸ் சீத்தைவகைகள், சகல விதமான பிளவுஸ் பீஸ்வகைகள், செக்துணி வகைகள் மற்றும் றெடிமேட் ஆடைவகைகளும் விற்பனைக்கு உண்டு.

**நம்பிக்கையுடன் நாட வேண்டிய இடம்**

## புதிய தாரகை புடைவை மாளிகை

பலாலி வீதி, திருநெல்வேலிச்சந்தி' (3789)

---

### சுகாதாரத் திணைக்களம் - யாழ்ப்பாணம்

1993ஆம் ஆண்டுக்கு பின்வரும் அரசினர் வைத்திய சாலைகளுக்கு பால் தவிர்ந்த சமைத்த உணவு வழங்குவதற்கான கேள்விகள் மீளக் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரங்கள் 22-12-92 ந. ப. 12-00 மணி வரை இப் பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் 23-12-92ஆம் திகதி மு. ப. 10-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு திறக்கப்படும் கேள்விதாரர் விரும்பினால் அச்சமயம் சமுகமளிக்கலாம்.

கேள்வி மீளக் கோரப்படும் நிறுவனங்கள் பின்வருமாறு:

(1) ம. ம. ம. ம., அம்பன்
(2) ம. ம. ம. ம., தர்மபுரம்
(3) ம. ம. ம. ம., மானிப்பாய்
(4) ம. ம. ம. ம., உருத்திரபுரம்.

வைத்தியகலாநிதி பொ. இரத்தினசபாபதி,
சுகாதாரசேவைகள் பிராந்திய பணிப்பாளர்.

சுகாதாரசேவைகள் பிராந்திய பணிப்பாளர் பணிமனை,
இல. 59, விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம்.
15-12-92. (சி-5594)

---

மூன்றாம் ஆண்டு

## கண்ணீர் அஞ்சலி

ஆனந்தக் கடலில்
ஆழ்த்தி மலர்ந்தது
22-10-1986

ஆறாத்துயரில்
ஆழ்த்தி மறைந்தது
19-12-1989



### செல்வி யோதிகா யோகராசா

(யோயோ)

திதி. 16-12-1992

அள்ளி அணைத்திட ஆசைக்கோர்மகளாய்
அவனிமிசை பிறந்து
துள்ளி நடைபயின்று பவளவாய் தனைத் திறந்து
பள்ளி செல்லும் பால வயதில் பள்ளி கொண்டு
தவிப்போய் தரணியில் நாம் பரிதவிக்க புவித்தாய்
மடியில் உறங்குகிறாய்...

நாவொன்றும் சொல்லாத நாம் படும் துயரமாம்
மூவிரண்டு நாள் நோயில் நீ எமை மறந்து துயின்று
விழியிரண்டும நீர் சொரிய வீழ்ந்ததம்மா மூன்றாண்டு!
அழியாத ஓவியம் நீ! எம்மில நாம் அளிக்கும
அஞ்சலி இது.

என்றும் உன் நினைவாக ஏங்கித்
வேலணை கிழக்கு, தவிக்கும் பிரியமுள்ள
வேலணை - 2 அப்பா, அம்மா,
(3788) அண்ணாமார், உறவினர்கள்.

---

குருநகர்
யாழ்ப்பாணம். -குடும்பத்தினர்
(சி-5590)

---

## நினைவு கூருகின்றோம்...

### 1992-12-16

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில், மட்டு - கஞ்சிகுடிச்சாறுப் பகுதியில் தேசவிரோதிகளுடனான சமரில் வீரச்சாவெய்திய -

**2-ம்லெப். கல்கி** (சாமித்தம்பி குகநாதன் - காரைதீவு)

யாழ். குருநகரில் எதிர்பாராத விதமாக கைக்குண்டு வெடித்ததில் எமைப்பிரிந்த -

குருநகர்ப் பிரதேசப் பொறுப்பாளர் -

**தேவதாஸ்** (யோசப் அன்ரன் தேவராஜா 87, கடற்கரை வீதி, குருநகர் - யாழ்.)

**சீலன்** (நாசரத்தினம் நவரத்தினராஜா - இராசாவின் தோட்டம் வீதி, யாழ்.)

1987ஆம் ஆண்டு அம்பாறை காரைதீவுப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

**லெப். விக்ரம்** (சண்முகம் முத்துராமன் - சேனைக் குடியிருப்பு, கல்முனை - அம்பாறை)

மன்னார் - விடத்தல்தீவுப் பகுதியில் ரெலோ தேச விரோதிகளுடனான சமரில் வீரச்சாவெய்திய -

**லுக்மன்** (சௌந்தரராஜன் கொன்சன் டேவிற் - நானாட்டன் மன்னார்)

**2-ம்லெப். முருகேசு** (மருசால் நீக்கிலஸ் - கன்னாட்டி, அடம்பன் - மன்னார்)

1988ஆம் ஆண்டு அல்வாய், நாவலடிப் பகுதியில், இந்தியப் படையினர், மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ். தேச விரோதிகளுடனான சமரின்போது விழுப்புண் அடைந்த நிலையில் தனது கைக்குண்டை வெடிக்கவைத்து வீரச்சாவெய்திய -

**மோகன்** (சோதிலிங்கம் சிவலிங்கம் - அல்வாய் தெற்கு - யாழ்.)

மன்னார் - பண்டிவிரிச்சானில் தவறுதலாக எமது பொறிவெடியில் சிக்கியதில், தன்னைத் தானே சுட்டு எமைப் பிரிந்த -

**அன்னக்கிளி** (பிரான்சிஸ் செபஸ்ரின் - செல்லையாபுரம், பூநகரி - மன்னார்)

1990ஆம் ஆண்டு மட்டு - புல்லுமலைப் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட விபத்தில் எமைப் பிரிந்த -

**வசந்** (சீனித்தம்பி துரை - புல்லுமலை - மட்டக்களப்பு)

வேலணைப் பகுதியில், சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானக் குண்டு வீச்சில் கொல்லப்பட்ட பெண் குழந்தை, தாய், மற்றும், ஒரு சிறுவன் உட்பட 4 - தமிழர்கள்.

1991ஆம் ஆண்டு மன்னார் - அரிப்புப் பகுதியில், இராணுவத்தினரின் பொறிவெடியில் சிக்கிப் பலியான இரு குழந்தைகளின் தந்தையான தமிழ்ப்பொதுமகன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி-5592]

நல்லூர் [illegible] நூலகம்

### சிந்தனைக்கு

சிறப்பு மிக்க நிகழ்வுகள், பல வேளைகளில் சின்னஞ் சிறு சந்தர்ப்பங்களிலிருந்து தான் உதிக்கின்றன.

— லிவி

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம்- 16-12-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண் - 05

## காட்டிக் கொடுத்தது யார்?

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவென உருவாக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் நடவடிக்கைகள் தோல்வியில் முடிவடைந்துள்ளன. சுமார் ஒன்றரை வருட செயற்பாட்டின் பின்னரும் தமிழர் தரப்பில் எவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வுத் திட்டம் எதையும் தெரிவுக் குழுவால் முன்வைக்க முடியவில்லை. சர்வகட்சி மாநாடுகள் வரிசையில் பாராளுமன்றத் தெரிவுக் குழுக்களும் சேர்ந்து கொண்டது.

ஆனால் பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் இம்முடிவானது தமிழ் மக்களைப் பொறுத்து ஏமாற்றம் அளிக்கும் ஒன்றாக இருக்க முடியாது. ஏனெனில் அது குறித்து அவர்கள் பெரிய எதிர்பார்ப்பு எதையும் கொண்டு இருக்கவில்லை. ஆனால் கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களின் நிலையைத்தான் பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் இவ்அவல முடிவு பெரிதாகப் பாதித்துள்ளது. இதனை அரசாங்கத்தின் மீது அவர்கள் கொண்டுள்ள சீற்றத்தில் இருந்தே யாவரும் விளங்கிக் கொள்ள முடியும்.

பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் சமாதானத் திட்டம் என்பது அப்பட்டமான கேலிக் கூத்தென்றும், இக்குழு தமிழரைக் காட்டிக் கொடுத்து விட்டது என்றும் கொழும்பிலுள்ள ஆறு தமிழ்க் குழுக்கள் அரசாங்கத்தைக் குறறம் சாட்டியுள்ளன, ஆனால், இக்குற்றச்சாட்டு எந்தளவிற்குப் பொருத்தமானது, இக்குற்றச்சாட்டை முன்வைப்பதற்கு கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களுக்கு எந்தளவிற்குத் தகுதி உள்ளது என்பது கேள்விக்குரியது.

சிங்களப் பாராளுமன்றம் போன்றே பாராளுமன்றத் தெரிவுக் குழுவும் சிங்களப் பேரினவாதிகளின் குகையாகவே இருந்தது. பாராளுமன்றத்தில் கட்சிகள் பெற்றுள்ள அங்கத்துவத்திற்கு ஏற்ப இல்லாவிட்டாலும் ஐக்கிய தேசியக் கட்சியே தெரிவுக்குழுவிலும் பெரும்பான்மையாகும், அடுத்து சிறிலங்கா சுதந்திரக் கட்சி அதிக எண்ணிக்கை கொண்டிருந்தது. இதனை நவசமசமாஜக்கட்சியின் செயலர் விக்கிரமபாகு கருணாரட்னா குறிப்பிட்டது போன்று "தெரிவுக்குழு மூலம் சிங்கள இனவாதிகள் ஒன்று சேர்க்கப்பட்டுள்ளார்கள்." என்று கூறின் தப்பில்லை. இதுவே உண்மைநிலையும் ஆகும்.

இதனை வலியுறுத்துமாற் போலவே பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் நடந்த இரகசிய வாக்

# ஈரான் வழியில் இந்து இராச்சியம்; இந்து அடிப்படைவாதிகளின் லட்சியம்

அயோத்தி விவகாரம் என்பது இராமபிரானுக்கு ஆலயம் அமைப்பது அல்லது பதினான்காம் நூற்றாண்டைச் சேர்ந்த முகலாய சக்கரவர்த்திகளால் கட்டப்பட்ட பாபர் மசூதி பள்ளிவாசலை இடித்து விடுவது என்பவற்றுடன் மட்டும் எல்லைப் படுத்தப்பட்டு விடுகின்ற ஒரு விடயமாக இப்போதும் இல்லை. இந்திய அரசாங்கம் கடைப்பிடிப்பதாகக் கூறும் மதச் சார்பற்ற தன்மை இந்தியா அயல் நாடுகளுடன் கொண்டுள்ள உறவு. இந்தியாவிற்கு அரபுலகில் இருந்த மதிப்பு, இந்தியாவின் பொருளாதாரம், இந்தியாவிற்கான உல்லாசப் பயணிகளின் வருகை என்பன போன்ற பல்வேறு விடயங்களுடன் தொடர்பு பட்டதாக இப்போது அயோத்தி விவகாரம் பரிணாமம் பெற்று விட்டது எனலாம்.

கடந்த டிசம்பர் ஆறாம் திகதியன்று உத்தரப் பிரதேச மாநிலத்தின் அயோத்தியாவில் சர்ச்சைக்குரிய பாபர் மசூதி வளாகத்திற்கு எதிரே மாநில அரசால் கையகப் படுத்தப்பட்ட நிலத்தில் திருப்பணித் தொண்டர்கள் கூடி காரிசேவா மட்டுமே நடத்துவார்கள் என்று மாநில அரசு உச்சநீதி மன்றத்திற்கு உறுதி அளித்திருந்தது. மேலும் "கார் சேவா" என்பது திருப்பணித் தொண்டர்கள் கூடி பஜனையில் ஈடுபடுதல், கீர்த்தனங்கள் பாடுதல், சமயச் சடங்குகள் நடத்துதல் என்றும் மாநில அரசு விளக்கம் அளித்திருந்தது கட்டுமாணப்பணிக்குரிய பொருள்கள் எவற்றுடனும் கையகப்படுத்தப்பட்ட நிலத்திற்குள் பிரவேசிக்கக் கூடாது என்ற உத்தரவு வந்தபோது சரயு ஆற்றிலிருந்து எடுத்துவரப்படும் புனித மண்ணைக் கொண்டு குழிகள் நிரவப்படும் என்ற அறிவிப்பு விஷ்வ இந்து பரிஷத்திடமிருந்து வெளியானது. ஆனால் சுமார் ஆறு நூற்றாண்டு காலப் பழமை வாய்ந்த பாபர் மஜ்ஜித் இந்து மத அடிப்படையை வலியுறுத்தும் தீவிரவாதிகளால் ஆறு மணிநேரத்தில் தகர்க்கப்படும் என்று பொதுவாக யாரும் எதிர்பார்த்திருக்க முடியாது தான்.

இந்து மத அடிப்படையிலான தீவிரவாதிகளின் இந்தச் செயல் இந்தியாவிலுள்ள முஸ்லிம்களின் மனத்தை மட்டுமன்றி, மதச் சார்பற்ற போக்கைக்கடைப்பிடிக்க விரும்பும் எவரையும் பாதித்து இருக்கின்றது. இந்தியாவின் பண்புச் சூழல் சேதமாக்கப் பட்டுவிட்டதாக இந்தியக்குடியரசுத் தலைவரும். இந்தியாவிற்கு பெரும் வெட்கக்கேடு நேர்ந்து விட்டதாக பிரதமரும் கூறித் தமது கவலையை வெளியிட்டனர். அத்துடன் இந்தியா முழுவதிலும் இடம் பெற்ற பல்வேறு சம்பவங்களில் ஆயிரத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டதுடன் பிரதான எதிர்க்கட்சியான பாரதீய ஜனதாக்கட்சியின் முக்கிய தலைவர்கள் உட்பட பல்லாயிரக்கணக்கானோர் கைது செய்யப்பட்டனர் பதினாறு மாநிலங்களில் ஊரடங்கு உத்தரவு அமுலாக வேண்டிய நிலை ஏற்பட்டது. மதச் சார்புடைய ஐந்து அமைப்புக்களுக்கு உத்தியோக பூர்வமாக தடை விதிக்கப்பட்டதுடன் அவற்றின் அலுவலகங்கள் மூடி சீல்வைக்கப்பட்டதோடு. அவற்றின் வங்கிக் கணக்குகளும் முடக்கப்பட்டன. ஆனால் இவையெல்லாம் இந்தியாவின் உள்நாட்டில் இடம்பெற்ற விடயங்கள்.

### வெளிநாடுகளில் ஏற்பட்ட எதிரொலி

பாபர் மசூதி தகர்க்கப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து பாகிஸ்தானிலும், பங்களாதேசிலும் இந்துக் கோயில்கள் சேதமாக்கப்பட்டன. இந்துக்கள் தாக்குதலுக்கு முகம் கொடுக்க வேண்டியவர்களாயினர். துருக்கியில் இந்தியத் தூதுவரின் வாகனம் வெடிகுண்டு வைத்து தகர்க்கப்பட்டது. சவுதியில் இந்து ஆலயம் உடைக்கப்பட்டது. பிரிட்டனிலும் இந்துக் கோயில்சேதமாக்கப்பட்டது. பாகிஸ்தானில் இந்தியக் கவுன்சில் ஜெனரலின் வீடு தீக்கிரையாக்கப்பட்டதுடன் சொத்துக்கள் சூறையாடப்பட்டன. அயோத்தியா அசம்பாவிதங்கள் இடம் பெறுவதற்கு ஒரு சில தினங்களுக்குமுன்பாகத்தான்பாகிஸ்தான் இந்தியாவிற்கு செல்வதைத் தவிர்க்கும்படி தனது பிரஜைகளுக்கு ஆலோசனை கூறியிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

### சார்க்கில் எதிரொலிப்பு

பாபர் மசூதி இடிக்கப்பட்டமை தொடர்பாக இஸ்லாமிய நாடுகளின் மாநாட்டில் விவாதிக்கப்பட வேண்டும் என்று பங்களாதேஷ் அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது. பங்களாதேசிலிருந்து வந்து இந்தியாவில் சட்ட விரோதமாக குடியேறி இருப்பவர்களை மீண்டும் நாட்டுக்கு திருப்பி அனுப்பும் ஒப்பரேஷன் புஷ்பாக் (Operation Push Back) நடவடிக்கையை கடந்த அக்டோபரில் ஆரம்பித்ததில் இருந்தே பங்களாதேஷ் - இந்திய உறவில் சிறிது முறுகல் நிலை தோன்றியிருந்தது. இது பற்றிக் குறிப்பிட்ட பங்களாதேசின் எதிர்க்கட்சித் தலைவியான ஷேய்க் ஹசீனா வசித் இந்தியாவின் இத்தகைய செயல் தென்னாசியப் பிராந்திய நாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்பு உணர்வுக்கு விரோதமானது என்றும் வர்ணித்திருந்தார்.

இந்தியாவிலுள்ள இஸ்லாமியர்களின் புனித ஸ்தலங்களின் பாதுகாப்பிற்கு இந்திய அரசு உத்தரவாதம் அளிக்க வேண்டும் எனவும், இந்து மதவெறியர்களிடமிருந்து முஸ்லிம்கள் பாதுகாக்கப்படுவர் என்ற உறுதிமொழியை இந்திய அரசு வழங்க வேண்டுமெனவும் பாகிஸ்தான் பிரதமர் நவாப் ஷரீப் பகிரங்கமாக கோரிக்கை விடுத்துள்ளார். அயோத்தியா சம்பவத்தை தொடர்ந்து விசேட அமைச்சரவைக் கூட்டத்தை நடத்திய அவர் இப் பிரச்சினை குறித்து தெற்காசிய பிராந்திய நாடுகளின் தலைவர்கள் நடத்தும் உச்சி மாநாட்டின் போது பிரஸ்தாபிக்கத் திட்டமிட்டிருந்ததுடன் ஐ.நா விலும் இவ் விவகாரத்தை எழுப்பும் எண்ணம் கொண்டுள்ளார்.

இந்த நிலையில் தான் அயோத்தியாவில் நிகழ்ந்த சம்பவங்களால் தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு சங்கத்தின் எதிர்காலத்திற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாக சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா டாக்காவில் செய்தியாளர்களிடையே பேசுகையில் தெரிவித்தார். உள்நாட்டில் எழுந்த சூழ்நிலை காரணமாக டாக்காவில் நிகழவிருந்த சார்க் உச்சிமாநாடு இந்தியப் பிரதமர் பி.வி. நரசிம்மராவ் வருகை தராதபோதும் திட்டமிட்டபடி பங்களாதேஷ், பாகிஸ்தான், சிறிலங்கா தலைவர்கள் டாக்காவில் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியுள்ளனர்.

திட்டமிடப்பட்டபடி டாக்காவிற்கு விஜயம் மேற்கொண்ட பிரேமதாசா தொடர்ந்து புத்தகாயா செல்வதற்கும், அங்கு தங்கவேலி, மற்றும் தங்க விதானத்தை திறந்துவைப்பதுடன், புத்தகாயா மாதிரிக் கிராமத்திற்கு அத்திவாரம் இடுவதும் அவரது நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்றிருந்தது. ஆனால், இந்தியாவின் பாதுகாப்புச் சூழல் காரணமாக அவரது இந்திய விஜயம் கைவிடப்பட்டதாக பின்னர் அறிவிக்கப்பட்டது பிரேமதாசாவின் இந்திய விஜயம் தற்போதைக்கு கைவிடப்பட்டமைக்கு வேறு ஏதும் காரணங்கள் இருக்கலாமோ என்றும் இவ் இடத்தில் ஊகிக்க இடமுண்டு.

ஏனெனில் இந்திய வெளியுறவுச் செயலர் ஜே என். டிக்சிட் டாக்கா உச்சி மாநாடு ஒத்திவைக்கப்பட வேண்டிய தன் அவசியத்தை டாக்காவில் வலியுறுத்திய அதே தருணத்தில்தான், சார்க் அமைப்பின் தற்போதைய தலைவர் என்ற வகையில் திரு. பிரேமதாசா பிராந்தியத்தில் தோன்றியிருக்கும் வகுப்புவாத மோதல்களையும் சமயப் பூசல்களையும் ஒன்றுபட்டு நின்று எதிர்க்க வேண்டுமென பிராந்திய நாடுகளின் தலைவர்களுக்கு கடிதம் எழுதியிருந்தார். மேலும் பீகார் மாநிலத்தின் புத்தகாயா செல்லும் பிரேமதாசா புதுடில்லிக்கு பாதுகாப்புக் காரணங்களுக்காக செல்ல மாட்டார் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது ஆனால் இறுதியில் புத்த காயாவிஜயத்தையும் மேற்கொள்ளாமல் அவர் வெற்றியுடன் நாடு திரும்பியுள்ளார். இவற்றின் அடிப்படையில் தொகுத்து நோக்கும் போது சார்க் நாடுகளின் கூட்டுறவு மயிரிழையில் தொங்கும் நிலையை அயோத்தியா சம்பவம் ஏற்படுத்தியுள்ளது எனலாம்.

### ஈரானின் வழியில் இந்து தீவிரவாதிகள்

இந்தியாவில் இருக்கும் இந்துத் தீவிரவாதிகளின் செயல்களும், திட்டங்களும் ஈரானிய மாதிரியை முன் உதாரணமாகக் கொண்டவை என்று இந்திய மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் குழு உறுப்பினர்களில் ஒருவரான சீதாராம் ஜெசூரி வர்ணித்துள்ளார். அதாவது மதரீதியான அமைப்புக்களுக்கு எளிதில் செவி சாய்க்கக் கூடிய மக்களின் உணர்வுகளைப் பயன்படுத்தி அரசியலில் ஆதிக்கம் செலுத்த முனைகின்றனர் இந்து மதத் தீவிரவாதிகள் என்பதுவே இவரது கருத்தாகும்.

இதேவேளை இந்தியாவின் சமஷ்டிப் புலனாய்வு பணியகத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் கருத்து வெளியிடுகையில், ஈரானின் மதத்தலைவரான காலஞ்சென்ற அயத்தொல்லா கொமெய்னியை இந்து மதவாதிகள் பின்பற்றுவதாகக் குறிப்பிட்டார். 1979ல் ஈரானில் இஸ்லாமியப் புரட்சி வெற்றி பெற்றபோது ஆர். எஸ். எஸ். பெரும் குதூகலமடைந்திருந்ததுபுலனாய்வு தகவல்கள் மூலம் தெரியவந்திருப்பதாகவும் குறிப்பிடப்படுகிறது.

எனவேதான் இந்தியாவை பரந்துபட்ட இந்துராஜ்யமாக ஆக்க வேண்டுமென்ற கனவுடன் ஆர். எஸ். எஸ். செயற்படுவதாக கூறப்படுகிறது. இதுகாலவரையிலான இந்திய அரசாங்கங்கள் எதுவும் கண்டிராத வகையிலான கிளர்ச்சியை ஆரம்பிக்கப் போவதாக ஆர். எஸ். எஸ். இயக்கத்தின் சிரேஷ்ட உறுப்பினரான சுந்தர் சிங் பண்டாரி டில்லியிலிருந்து வெளியிடப்படும் 'மிட்டே' சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் கூறியிருப்பதையும் அவதானிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

மக்கள் வீதிகளில் இலட்சக்கணக்கில் இறங்கி கிளர்ச்சியில் ஈடுபடும் போது பாதுகாப்பு படையினர் தங்கள் சொந்த மக்களை சுடத்தயங்கும் சூழ்நிலையை உருவாக்கியதே ஈரானிய புரட்சி வெற்றி பெற்றதன் ரகசியம் என்றும், அத்தகைய நிலையை உருவாக்கவே இந்து மத தீவிரவாதிகளும் முயற்சிப்பதாகவும் கூறப்படுகிறது.

**இளையவன்**

கள் அரசாங்கத்தைக் குறறம் சாட்டியுள்ளன, ஆனால், இக்குற்றச்சாட்டு எந்தளவிற்குப் பொருத்தமானது, இக்குற்றச்சாட்டை முன்வைப்பதற்கு கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களுக்கு எந்தளவிற்குத் தகுதி உள்ளது என்பது கேள்விக்குரியது.

சிங்களப் பாராளுமன்றம் போன்றே பாராளுமன்றத் தெரிவுக் குழுவும் சிங்களப் பேரினவாதிகளின் குகையாகவே இருந்தது. பாராளுமன்றத்தில் கட்சிகள் பெற்றுள்ள அங்கத்துவத்திற்கு ஏற்ப இல்லாவிட்டாலும் ஐக்கிய தேசியக் கட்சியே தெரிவுக்குழுவிலும் பெரும்பான்மையாகும், அடுத்து சிறிலங்கா சுதந்திரக் கட்சி அதிக எண்ணிக்கை கொண்டிருந்தது. இதனை நவசமசமாஜக்கட்சியின் செயலர் விக்கிரமபாகு கருணாரட்னா குறிப்பிட்டது போன்று "தெரிவுக்குழு மூலம் சிங்கள இனவாதிகள் ஒன்று சேர்க்கப்பட்டுள்ளார்கள்." என்று கூறின் தப்பில்லை. இதுவே உண்மைநிலையும் ஆகும்.

இதனை வலியுறுத்துமாற் போலவே பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் நடந்த இரகசிய வாக்கெடுப்பின் முடிவும் இருந்தது. நாற்பத்திஐந்து பேர் கொண்ட பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் 42 பேர் வடக்கு-கிழக்கு இணைப்பிற்கும், சமஷ்டி அமைப்பு முறைக்கும் எதிராகவே வாக்களித்தனர். இதில் இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியற் தீர்வு காணப்பட வேண்டும் என்று பிரேரணை கொண்டு வந்த பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் தலைவர் மங்கள முனசிங்காவும், இனப்பிரச்சினை தொடர்பாக ஐ.தே.கட்சியின் சார்பில் முக்கிய பங்காற்றிய ஏ சீ.எஸ்.ஹமீத் அடங்கும். அதாவது இரகசிய வாக்கெடுப்பொன்றிலேயே இவர்களால் இனப்பிரச்சினைத்தீர்விற்கு அடிப்படையாகவுள்ள அம்சங்களுக்கு ஆதரவளிக்க முடியவில்லை. இந்நிலையில் தெரிவுக் குழுவைச் சிங்கள இன ஆதிக்க வாதிகளின் கூட்டம் எனக் கூறுவதில் தப்பென்ன?

இந்நிலையில் இப்பேரினவாதக் கூட்டம் தமிழர் பிரச்சினைக்கு தீர்வுகாண தவறிவிட்டது. தமிழரைக் காட்டிக்கொடுத்துவிட்டது எனக் கூக்குரல் இடுவதில் அர்த்தம் ஏதுமில்லை. தெரிவுக் குழு மூலம் பேரினவாதிகள் தம்மை மீண்டும் ஒருமுறை வெளிக் காட்டிக்கொடுத்துள்ளார்களே ஒழிய இதில் வேறொன்றும் இல்லை. ஆனால், தமிழ் இனத்தையும் தமிழர் தாயகத்தையும் சிங்களப் பேரினவாதிகளிடம் தமிழ்க்குழுக்களே காட்டிக்கொடுத்துள்ளார்கள். பாராளுமன்றத் தெரிவுக் குழுவிடம் இனப்பிரச்சினைக்குத் தீர்வைமுன்வைத்தல் என்ற போர்வையில் தமிழர்தாயகத்தை துண்டாடவும் தமிழர் தாயகத்தின் ஒரு பகுதியை பேரினவாதிகளுக்கு தாரை வார்க்கவும் இவர்களே முன்வந்தவர்கள். இதைவிட இராணுவ ரீதியாகவும் இனத்தைக் காட்டிக் கொடுக்கும் கோடரிக்காம்புகளாக ஆக்கிரமிப்பாளர்களுடன் சேர்ந்து செயற்பட்டு இன அழிவிற்கும் வழி செய்தார்கள்.

இதற்கு முன்னரும் இந்தியாவுடன் இணைந்து தமிழரின் தேசியஇனப்போராட்டத்தைகாட்டிக்கொடுத்தார்கள். பின்னர் சிங்கள பேரினவாதிகளுடன் இணைந்து காட்டிக்கொடுப்பில் ஈடுபட்டனர். இன்று எச்சில் இலையில் எசமான் விட்ட சோறும் எலும்பும் போதாது என்றதும் தமிழரைக் காட்டிக்கொடுத்ததாக கத்துகின்றார்கள். இதைக் கூற இவர்களுக்கு தார்மீக உரிமை எதுவுமில்லை. ஆனால், இவர்கள் தாயகத்தைக் காட்டிக் கொடுக்க எம்மைச் சிங்களப் பேரினவாதம் காட்டிக்கொடுத்து விட்டது என அரசு மீது ஆத்திரம் கொண்டால் அது நியாயமானதும் ஏற்றுக கொள்ளக் கூடியதும் ஆகும்.

---

தது கட்டுமாணப்பணிக்குரிய பொருள்கள் எவற்றுடனும் கையகப்படுத்தப்பட்ட நிலத்திற்குள் பிரவேசிக்கக் கூடாது என்ற உத்தரவு வந்தபோது சரயு ஆற்றிலிருந்து எடுத்து வரப்படும் புனித மண்ணைக் கொண்டு சூழிகள் நிரவப்படும் என்ற அறிவிப்பு விஷ்வ இந்து பரிஷத்திடமிருந்து வெளியானது ஆனால் சுமார் ஆறு நூற்றாண்டு காலப் பழமை வாய்ந்த பாபர் மஜ்ஜித் இந்து மத அடிப்படையை வலியுறுத்தும் தீவிரவாதிகளால் ஆறு மணிநேரத்தில் தகர்க்கப்படும் என்று பொதுவாக யாரும் எதிர்பார்த்திருக்க முடியாது தான்.

இந்து மத அடிப்படையிலான தீவிரவாதிகளின் இந்தச் செயல் இந்தியாவிலுள்ள

கொடுக்க வேண்டியவர்களாயினர். துருக்கியில் இந்தியத் தூதுவரின் வாகனம் வெடிகுண்டு வைத்து தகர்க்கப்பட்டது. சவுதியில் இந்து ஆலயம் உடைக்கப்பட்டது. பிரிட்டனிலும் இந்துக் கோயில்சேதமாக்கப்பட்டது. பாகிஸ்தானில் இந்தியக் கவுன்சில் ஜெனரலின் வீடு தீக்கிரையாக்கப்பட்டதுடன் சொத்துக்கள் சூறையாடப்பட்டன. அயோத்தியா அசம்பாவிதங்கள் இடம் பெறுவதற்கு ஒரு சில தினங்களுக்குமுன்பாகத்தான்பாகிஸ்தான் இந்தியாவிற்கு செல்வதைத் தவிர்க்கும்படி தனது பிரஜைகளுக்கு ஆலோசனை கூறியிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ரவைக் கூட்டத்தை நடத்திய அவர் இப் பிரச்சினை குறித்து தெற்காசிய பிராந்திய நாடுகளின் தலைவர்கள் நடத்தும் உச்சி மாநாட்டின் போது பிரஸ்தாபிக்கத் திட்டமிட்டிருந்ததுடன் ஐ.நா விலும் இவ் விவகாரத்தை எழுப்பும் எண்ணம் கொண்டுள்ளார்.

இந்த நிலையில் தான் அயோத்தியாவில் நிகழ்ந்த சம்பவங்களால் தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு சங்கத்தின் எதிர்காலத்திற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாக சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா டாக்காவில் செய்தியாளர்களிடையே பேசுகையில் தெரிவித்தார். உள்நாட்டில் எழுந்த சூழ்நிலை காரணமாக டாக்காவில் நிகழவிருந்த சார்க் உச்சிமாநாடு இந்தியப்

தம் எழுதியிருந்தார். மேலும் பீகார் மாநிலத்தின் புத்த காயா செல்லும் பிரேமதாசா புதுடில்லிக்கு பாதுகாப்புக் காரணங்களுக்காக செல்ல மாட்டார் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது ஆனால் இறுதியில் புத்த காயாவிஜயத்தையும் மேற்கொள்ளாமல் அவர் வெற்றியுடன் நாடு திரும்பியுள்ளார். இவற்றின் அடிப்படையில் தொகுத்து நோக்கும்போது சார்க் நாடுகளின் கூட்டுறவு மயிரிழையில் தொங்கும் நிலையை அயோத்தியா சம்பவம் ஏற்படுத்தியுள்ளது எனலாம்.

## ஈரானின் வழியில் இந்து தீவிரவாதிகள்

இந்தியாவில் இருக்கும் இந்துத் தீவிரவாதிகளின் செயல் சிரேஷ்ட உறுப்பினரான சுந்தர் சிங் பண்டாரி டில்லியிலிருந்து வெளியிடப்படும் 'மிட்டே' சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் கூறியிருப்பதையும் அவதானிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

மக்கள் வீதிகளில் இலட்சக் கணக்கில் இறங்கி கிளர்ச்சியில் ஈடுபடும் போது பாதுகாப்பு படையினர் தங்கள் சொந்த மக்களை சுடத்தயங்கும் சூழ்நிலையை உருவாக்கியதே ஈரானிய புரட்சி வெற்றி பெற்றதன் ரகசியம் என்றும், அத்தகைய நிலையை உருவாக்கவே இந்து மத தீவிரவாதிகளும் முயற்சிப்பதாகவும் கூறப்படுகிறது.

**இளையவன்**

---

### "பாகிஸ்தான் ஒரு பயங்கரவாத நாடு"

# பிரகடனப் படுத்துவது குறித்து அமெரிக்கா தீவிர யோசனை

(வாஷிங்டன்)

பாகிஸ்தானை ஒரு பயங்கரவாத நாடாகப் பிரகடனப்படுத்த அமெரிக்கா ஆலோசித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

லிபியா, சிரியா, கியூபா வரிசையில் பாகிஸ்தானையும் ஒரு பயங்கரவாத நாடாகச் சேர்த்துக் கொள்ள அமெரிக்கா ஆலோசித்து வருவதாக அமெரிக்காவில் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

காஷ்மீர் தீவிரவாதிகளுக்கும் பாகிஸ்தான் உதவி வழங்கி வருவதாலேயே அதனையும் பயங்கரவாத நாடுகள் பட்டியலில் சேர்த்துக் கொள்ள அமெரிக்க ராஜாங்க இலாகா நடவடிக்கை எடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பயங்கரவாத நாடுகள் பற்றிய அமெரிக்க அரசின் வருடாந்த மதிப்பீட்டு அறிக்கையில் பாகிஸ்தானும் இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

# விமான ஊழியர் போராட்டம்; முறியடிக்க இந்தியா புதிய திட்டம்

## வாடகை விமானங்கள் பெற முடிவு

(டில்லி)

இந்தியாவின் விமானப் போக்குவரத்துத்துறை ஊழியர்களது வேலை நிறுத்தப் போராட்டத்தை முறியடிப்பதற்கு இந்திய அரசு புதிய திட்டமொன்றை நடைமுறைப்படுத்தியிருக்கிறது.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக சுமார் 166 இருக்கை வசதிகளைக் கொண்ட இரு பயணிகள் விமானங்களை உஸ்பெக்கிஸ்தான் விமானசேவை நிறுவனத்திடமிருந்து வாடகைக்கு பெறப்பட்டிருக்கிறது. விமான ஓட்டிகள், விமானப்பொறியியலாளர்கள் ஆகியோருடன் சேர்ந்தே இவ் இரு விமானங்களும் வாடகைக்கு அமர்த்தப்பட டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

இதன்படி டில்லி, பம்பாய், பெங்களூர், ஹைதராபாத், சென்னை கல்கத்தா ஆகிய முக்கிய நகரங்களுக்கிடையிலான விமானப் போக்குவரத்துக்களை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

அதேவேளை வேலை நிறுத்தம் செய்த எட்டு விமான ஓட்டிகள் மீண்டும் வேலைக்குத் திரும்பியுள்ளனர். இவர்களுடன் மொத்தம் 13 பேர் இதுவரை வேலைக்குத் திரும்பியுள்ளனர்.

### தடைசெய்யப்பட்ட அமைப்புகளின்

# தொண்டர்களைத் தேடி பொலிசார் தீவிர வேட்டை

(சென்னை)

இந்தியாவில் உள்ள தடைசெய்யப்பட்ட ஐந்துமத தீவிரவாத அமைப்புக்களைச் சேர்ந்த தீவிரவாத தொண்டர்கள் பொலிசாரால் கைது செய்யப்படுவது நேற்றும் தொடர்ந்து நடைபெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் அனைத்து மாநிலங்களிலும் காணப்படும் மேற்படி தடை செய்யப்பட்ட மதத் தீவிரவாத அமைப்புக்களின் அலுவலகங்கள் அனைத்தும் பொலிசாரால் சீல் வைக்கப்பட்டிருக்கிறது, அத்துடன் இவ் அமைப்புக்களின் வங்கிக் கணக்கு விபரங்களும் அறிந்து கொள்ளப்பட்டு அவையும் மூடப்பட்டிருக்கிறது,

### புலிகள் தடுத்து வைத்துள்ள

# 41 படையினரை விடுவிக்க அரசிடம் புதிய திட்டமாம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள 41 படையினரையும் விடுவிக்க சிறிலங்கா அரசாங்கம் புதிய திட்டமொன்றை முன்வைத்திருப்பதாக முன்னர் இது தொடர்பாக புலிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்த மதகுரு ஒருவர் தெரிவித்துள்ளார் இத் தகவலை ''லங்கா தீப'' வெளியிட்டுள்ளது.

''அரசாங்கத்தினால்தடுத்து வைக்கப்பட்டுள்ள தமது ஆதரவாளர்களில் 41 பேரை விடுதலை செய்யுமாறு விடுதலைப் புலிகள் கோரியுள்ளனர். ஆனால் அதற்குப் பதிலாக பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின்கீழ் அரசாங்கத்தால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 41 தமிழர்களை விடுதலை செய்ய அரசாங்கம் சம்மதித்துள்ளது'' இவ்வாறு அந்த மதகுரு தெரிவித்துள்ளார்.

இது குறித்து புலிகளின் நிலைப்பாட்டை தாம் அறிந்து கொள்ள நடவடிக்கை எடுத்து வருவதாக மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

# முன் திகதியிட்டு நியமனம்தர தொண். ஆசிரியர்கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் நிரந்தர நியமனம் பெற்ற தொண்டர் ஆசிரியர்கள் தமது நியமனத் திகதியை முற்போடுமாறு கோரி ஜனாதிபதிக்கு மகஜர் அனுப்பி வைத்துள்ளனர்.

இம்மாவட்டத்தில் கடமையாற்றிய ஒரு பகுதி தொண்டர் ஆசிரியர்களுக்கு கடந்த 1-9-92 அன்று நிரந்தர நியமனம் வழங்கப்பட்டிருந்தது. ஆனால் இவ் ஆசிரியர்கள் நிரந்தரமாக நியமிக்கப்பட்ட அதே நிபந்தனைகளின் அடிப்படையில் நாட்டின் ஏனைய மாவட்டங்களிலும் பலர் நிரந்தரமாக நியமிக்கப்பட்டிருக்கின்றனர் இவர்களுக்குகடந்த 1. 2. 92அன்றுநிரந்தர நியமனம் வழங்கப்பட்டது.

இதனால் யாழ். மாவட்டத்திற்கும் ஏனைய மாவட்டங்களுக்குமிடையில் நியமனத் திகதிகளில் காலவேறுபாடு தோன்றியிருக்கிறது இவ்வேறுபாட்டை நீக்கி மேற்படி காலத்திற்கான மீதமுள்ள சம்பளக் கொடுப்பனவை தமக்கு வழங்க வேண்டுமென்று யாழ். மாவட்ட தொண்டர் ஆசிரியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இக்கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றை யாழ். மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கம் தயாரித்து ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்கு அனுப்பி வைத்திருக்கிறது. அத்துடன் இம்மகஜரின் பிரதியொன்று கல்விச் சேவைக் குழுத்தலைவருக்கும் அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

## கூட்டம்

(கொழும்புத்துறை)

புங்கன்குளம் வீதி அரியாலை சனசமூக நிலையத்தின் 43-வது வருடாந்தப்பொதுக் கூட்டம் எதிர்வரும்27 ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10. 00 மணிக்கு அமரர் குமாரகுலசிங்கம் மண்டபத்தில்நிலையத் தலைவர் தலைமையில் இடம் பெறும்.

(24

ஈழநாதம்

# பாதிப்புற்ற படையினருக்கு தேசிய வீர திட்டம்

வடக்கு கிழக்கு யுத்தத்தால் பாதிப்புற்ற படையினருக்கு உதவும் முகமாக ''தேசிய வீர திட்டம்'' (ஜாதிக வீர பதக்கம்) என்ற திட்டம் கடந்த 13 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு யுத்தம் முடிவடையும் வரை நாட்டில் கோலாகல கொண்டாட்டம் பெரஹர போன்ற வைபவங்கள் என்பன போன்ற ஆடம்பர செலவுகளை நிறுத்தி ஒவ்வொரு சதத்தையும் யுத்த சேவைக்கு பயன்படுத்த மக்களை தூண்டும் விதத்தில் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இந்த நிதியத்தின் மூலம் யுத்தத்தில் ஊனமுற்ற படையினருக்கு முச்சக்கர வண்டி அளித்தல், குடும்பத் தலைவர்களை இழந்த குடும்பங்களுக்கு சுய தொழில் முயற்சித் திட்டம், பாதிக்கப்பட்ட படையினரின் குழந்தைகளுக்கு புலமைப் பரிசில் திட்டம் என்பன போன்ற பல்வேறு நலச் சேவைகள் செய்யப்படவுள்ளன.

## பாதுகாப்பு உத்தியோகஸ்தர்

(வடமராட்சி)

நெல்லியடி வர்த்தகர்சங்கம் ஆறு இரவு பாதுகாப்பு உத்தியோகத்தர்களை நியமித்துள்ளது.

நெல்லியடி வர்த்தக நிலையங்களைப் பாதுகாக்கும் நோக்கில் இவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். (யோ)


## கம்பியூட்டர் கல்வி


★ BASIC ★ dBASE III + ★ LOTUS 1 - 2 - 3
★ WORDSTAR 5-5 ★ COMPUTER TECHNOLOGY

புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

திங்கள், புதன், வெள்ளி வகுப்புக்கள் 16 - 12 - 92
சனி, ஞாயிறு வகுப்புக்கள் 19 - 12 - 92

O/L படித்த இருபாலாரும் சேரலாம்.

மேலதிக விபரங்களுக்கு:




யுனிக்கோ
கம்பியூட்டர் சென்ரர்

37, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
[வெலிங்டன் சந்திக்கு வடக்குப் பக்கமாக உள்ள மேல்மாடியில்]

[சி-5596]



இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்ப்பாணக் கிளைத் தலைமையலுவலகம்

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவு

## தைத்த ஆடைகள் கண்காட்சியும் பரிசு வழங்கலும்


## பரிபாலன சபை கூட்டம்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை இந்து இடுகாடு பரிபாலன சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி. ப. 3.30 மணிக்கு கொழும்புத்துறைசனசமூக நிலைய மண்டபத்தில் இடுகாடு பரிபாலன சபைத் தலைவர் திரு. க. மார்க்கண்டு தலைமையில் நடைபெறும்.

சகல பொதுச்சபை உறுப்பினர்களும் தவறாது சமூகம் தரும்படி கோரப்பட்டுள்ளது.

## கௌரவிப்பு விழா

கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயத்தில் ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்தியோரை கௌரவிக்கும் விழா நாளை மறுதினம் காலை 9.00 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெற உள்ளது.

இப் பரீட்சையில் மேற்படி பாடசாலையில் ஆறு மாணவர்கள் சித்தி யெய்தியமை குறிப்பிடத்தக்கது.

## ஒளி விழா

(வடமராட்சி)

அல்வாய் வடக்கு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் வருடாந்த 'ஒளிவிழா 17 ஆம் திகதி காலை 9மணிக்கு திருப்பலியுடன் ஆரம்பமாகும்

பங்குத்தந்தை அருட்திரு நேசநாயகம் அடிகளார் குத்து விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைப்பார். தொடர்ந்து மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (பா)

## சென்னையில் தங்கினார்

ஜனாதிபதி ஆர். பிரேமதாசா டாக்காவில் இருந்து கொழும்பு செல்லும் வழியில் நேற்று சென்னை வந்தார். அவருடன் அவரது சர்வதேச விவகார ஆலோசகர் பிறட்மன் வீரக்கோனும், ஆறு பாராளுமன்ற உறுப்பினர்களும் வந்திருந்தார்கள்.

அவர்களை விமான நிலையத்தில் தமிழக அரசின் பிரதம செயலாளர் ரி. வெங்கட்ராமர் தலைமையிலான குழு

# பலதார மணம் அனுமதிக்க வேண்டும்

## அஷ்ரப் கோரிக்கை

[கொழும்பு]

தவறான பாலினச்சேர்க்கையால் ஏற்படும் பிரச்சினைகள் மற்றும் எயிட்ஸ் போன்ற கொடிய நோயைத் தடுக்கும் வகையில் ஆண்கள் ஒரு மனைவிக்குமேல் வைத்திருக்க அனுமதி வழங்கப்படவேண்டும் என்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான முகமட் அஷ்ரப் கோரிக்கை விடுத்துள்ளார்.

இஸ்லாமிய சட்டத்தின்படி முஸ்லிம் ஆண் ஒருவர் நான்கு மனைவியரை வைத்திருப்பது நடைமுறையில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

# இனவிகிதாசார அடிப்படையில் தாதிகள் நியமனம்

தாதிச் சேவைக்கு ஆட்சேர்ப்பதிலும் இனவிகிதாசாரம் பேணப்படவிருக்கிறது.

குடும்பநல சுகாதார தாதிச் சேவையின் கீழ் நாடு முழுவதிலும் தற்பொழுது சுமார் 2000 வெற்றிடங்கள் நிரப்பப்படவிருக்கிறது இவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படவிருக்கிறது. இதற்கான நடவடிக்கைகளை எடுக்கும்படி சுகாதார, மகளிர் விவகார அமைச்சர் திருமதி ரேணுகா கேரத் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருக்கிறார். ஆள் திரட்டப்பட்டதும் அவர்களுக்குப் பயிற்சியளிக்கப்படவிருக்கிறது.

# பட்டதாரி பயிலுனர்கள் 4 ஆம் திகதி பதவியேற்பர்

நாடு முழுவதிலும் உள்ள சுமார் 7188 பேர் பட்டதாரி ஆசிரியர்களாக அடுத்த மாதம் நான்காம் திகதி பதவியேற்கவுள்ளனர்.

ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டிருக்கும் மேற்படி பட்டதாரிகள் குறுகியகால பயிற்சி நெறி ஒன்றைப் பின்பற்றவுள்ளனர்.

# ஐ. தே. கட்சியின் மாநாடு; எதிர்க்கட்சிகள் புறக்கணிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் ஞாயிறன்று நடைபெறவிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் 38-வது வருடாந்த மாநாட்டில் கலந்து கொள்வதில்லை என்று பெரும்பாலான எதிர்க்கட்சிகள் முடிவெடுத்துள்ளன. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மட்டும் தனது பிரதிநிதிகளை அனுப்புவதாகக் கூறியுள்ளது.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் இம் மாநாட்டில் கலந்துகொள்ளாது என்று அதன பொதுச்செயலாளர் ஜீ ஜீ. பொன்னம்பலம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஏற்கனவே கடிதமூலம் அறிவித்திருக்கிறார்.

லிபரல் கட்சியின் தலைவர் சானக அமரதுங்க தமது கட்சி ஏனைய அரசியல் கட்சிகளின் மாநாட்டில் கலந்துகொள்வதில்லை என்ற கொள்கைத் தீர்மானம் எடுத்திருப்பதாகக் கூறியுள்ளார். தமிழர் விடுதலைக் கூட்டணி வட்டாரங்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் அழைப்பை ஏற்றுக்கொள்ளவில்லை என்று கூறியுள்ளன.

## உதைபந்தாட்டப் போட்டி

மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன்

குடாநாடு

ரத் தடையை அமுல்படுத்தும் நோக்கில் யாழ்ப்பாணத்திற்கான கப்பல் சேவையை இடைநிறுத்துவதிலும் மண்ணெண்ணெய்கொண்டுவருவதற்கான அனுமதியில் கெடுபிடியையும் தபால் பைகள் பரிசோதனையில் தாமதத்தையும் சிறிலங்கா அரசாங்கம் ஏற்படுத்தி வருவதாகவும் அறியமுடிகின்றது

பிரச்சினை

சமஷ்டிக்கு எதிரான மனநிலையில் வளர்க்கப்பட்டிருக்கும் சிங்கள மக்கள் அதனை முளையிலேயே கிள்ளிவிடுவார்

# தமிழ்நாடு ஜனதா தள தலைவர் மீது தாக்கு

(சென்னை)

ஜனதா தளத்தின் தமிழ் நாடு துணைத் தலைவரும், வழக்கறிஞருமான பி.எம். சிறிதரன் சென்னையில் உள்ள அவரது இல்லத்தில் வைத்து நேற்றுச் சிலரால் தாக்கப்பட்டார் ஒரு சிலர் அவரின் வீட்டுக்குள் புகுந்து பொல்லால் அவரைத் தாக்கியதாகக் கூறப்படுகிறது.

வேலூரில் உள்ள இந்தக் கட்சியின் அலுவலகத்தின்மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. ஆட்டோ ரிக்‌ஷாக்களில் வந்த சிலர் கட்சியின் அலுவலகத்துக்குள் புகுந்து கத்திகளாலும், தடிகளாலும் தாக்கியதாகவும், இதனால் கட்சியைச் சேர்ந்த ஏழு பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதாகவும் கட்சியின் தலைவரான ராஜ்குமார் தெரிவித்துள்ளார். இது அரசியல் பழிவாங்கும் நடவடிக்கை எனவும் இதுபற்றித் தான் மத்திய அரசுக்குத் தந்திமூலம் அறிவித்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சித் தலைவர்கள் மீது தொடர்ந்து தாக்குதல் நடப்பதற்கு ஜெயலலிதா அரசே காரணமென்று பாட்டாளி மக்கள் கட்சித் துணைத் தலைவரும், முன்னாள் மாநில அமைச்சருமான பண்டுருட்டி ராமச்சந்திரன் கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

## சங்கீதம் பரதநாட்டியம் பரீட்சை முடிவுகள் வெளியாகின

யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பீடத்தினால் நடாத்தப்பட்ட கடந்தஆண்டுக்கான சங்கீத டிப்ளோமா, பரதநாட்டிய டிப்ளோமா ஆகிய பாடநெறிகளுக்கான பரீட்சையின் முடிவுகள் நேற்று வெளியாகியுள்ளன. இப் பரீட்சை முடிவுகளை மேற்படி பல்கலைக்கழக அறிவிப்புப்பலகையில் பார்வையிட முடியும்.

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



மேலதிக விபரங்களுக்கு:



## யுனிக்கோ
## கம்பியூட்டர் சென்ரர்

37, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
[வெலிங்டன் சந்திக்கு வடக்குப் பக்கமாக உள்ள மேல்மாடியில்]

[சி-5596]



இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்ப்பாணக் கிளைத் தலைமையலுவலகம்

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவு

## தைத்த ஆடைகள் கண்காட்சியும் பரிசு வழங்கலும்

மேற்படி கண்காட்சி எதிர்வரும் 22-ம், 23-ம் திகதிகளில் (காலை முதல் மாலை வரை) சாவகச்சேரி றிபேர்க் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. 23-ம் திகதி மாலை எமது பயிற்சி மாணவிகள் தைத்த ஆடைகள் விற்பனையும் அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பில் பரிசு பெற்றோர்களுக்கான பரிசுகளும் வழங்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| 1-ம் பரிசு | 977 | 4-ம் பரிசு | 84 |
| 2-ம் பரிசு | 608 | 5-ம் பரிசு | 965 |
| 3-ம் பரிசு | 1730 | | |

கௌரவ செயலாளர்

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
15-12-1992 (சி/5595)



## வடபிராந்திய வர்த்தகர் சங்கங்களின் சமாசம்

இல. 21, மேல் மாடி நவீனசந்தை,
யாழ்ப்பாணம்.

வருகின்ற நத்தார், புதுவருடம், தைப்பொங்கல் ஆகிய பண்டிகை நாட்களை முன்னிட்டு கீழ்வரும் நாட்களில் வர்த்தக நிலையங்களை முழுமையாக திறந்து வியாபாரம் செய்யலாமென இவ் அறிவித்தல் மூலம் அறியத் தருகின்றோம். மேற்படி அந்த நாட்களுக்குரிய மேலதிக வேலைக்கான கொடுப்பனவுகளை வர்த்தக நிலையங்கள் ஊழியர்களுக்கு வழங்க வேண்டுமெனவும் அறியத் தருகின்றோம்.

19-12-1992 சனிக்கிழமை, 20 12-1992 ஞாயிற்றுக்கிழமை, 26-12-1992 சனிக்கிழமை 27-12-1992 ஞாயிற்றுக்கிழமை 9-1-1993 சனிக்கிழமை, 10-1-1993 ஞாயிற்றுக்கிழமை.

நன்றி

என். கே. குலசிங்கம்
உப. தலைவர்

ஜெ. சந்திரகாந்தன்
செயலாளர்

(3790)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'சமநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


ஆரம்பமாகும்

பங்குத்தந்தை அருட்திரு நேசநாயகம் அடிகளார் குத்து விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைப்பார். தொடர்ந்து மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (பா)

## சென்னையில் தங்கினார்

ஜனாதிபதி ஆர். பிரேமதாசா டாக்காவில் இருந்து கொழும்பு செல்லும் வழியில் நேற்று சென்னை வந்தார். அவருடன் அவரது சர்வதேச விவகார ஆலோசகர் பிறட்மன் வீரக்கோனும், ஆறு பாராளுமன்ற உறுப்பினர்களும் வந்திருந்தார்கள்.

அவர்களை விமான நிலையத்தில் தமிழக அரசின் பிரதம செயலாளர் ரி. வெங்கட்ராமர் தலைமையிலான குழு வரவேற்றது. ஒரு மணி நேரத்துக்குப் பிறகு ஜனாதிபதி கொழும்பு பயணமானார்.

### நான்கு

நீது ஆஜன்ரீனா கொள்வனவு செய்த விமானங்களையே அரசு தற்போது வாங்கியுள்ளது. பழைமைவாய்ந்த இவ் விமானங்களை வடக்குக் கிழக்கில் யுத்தத்தில் பயன்படுத்துவதால் பெரிதாக எதனையும் சாதித்துவிட முடியாது.

அரசு இவ்வளவு பெருந்தொகை பணத்தை செலுத்தி "புக்காரா" விமானங்களை கொள்வனவு செய்வதிலும் பார்க்க பிரேசில் தயாரிப்பான ஒற்றை இயந்திரத்தைக் கொண்ட துக்கானோ விமானங்களை கொள்வனவு செய்திருக்கலாம் என்றார்.

புக்காரா விமானங்களை கொள்வனவு செய்வதற்கு விமானப்படை அதிகாரிகள் முன்னரே எதிர்ப்பு தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

### ஆசிரியர்

ஆசிரிய கலாசாலைகளுக்கான பரீட்சைகள் இம்மாதம் 18 ஆம் திகதி ஆரம்பமாகிறது என ஒலிபரப்பப்பட்டது இதனால் சகல மாணவர்களும் குழப்பம் அடைந்த நிலையில் உள்ள தோடு வெளிமாவட்ட மாணவர்கள் பெரிதும்பாதிப்படைந்துள்ளனர்.

இதே வேளை நேற்றிரவு இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன செய்தியில் ஆசிரியர் கல்லூரி இறுதியாண்டுப் பரீட்சை இம் மாதம் 28 ஆம் திகதி ஆரம்பிக்கும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

இவ்வாறே 1989 / 1990 காலப்பகுதிகளில் பயிற்சியை முடித்த ஆசிரியமாணவர்களுக்கும் அனுமதி அட்டைகள் பலமுறை வழங்கப்பட்டு பரீட்சை 1991ஆம் ஆண்டு மார்கழி மாதமே நடாத்தப் பட்டது.

கொள்வதில்லை என்று பெரும்பாலான எதிர்க்கட்சிகள் முடிவெடுத்துள்ளன. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மட்டும் தனது பிரதிநிதிகளை அனுப்புவதாகக் கூறியுள்ளது.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் இம் மாநாட்டில் கலந்துகொள்ளாது என்று அதன பொதுச் செயலாளர் ஜீ ஜீ. பொன்னம்பலம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஏற்கனவே கடிதமூலம் அறிவித்திருக்கிறார்.

லிபரல் கட்சியின் தலைவர் சானக அமரதுங்க தமது கட் ஏனைய அரசியல் கட்சிகளின்

## உதைபந்தாட்டப் போட்டி

மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு அரங்கில் நடைபெறும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் கால் இறுதி ஆட்டங்கள் இன்று நடைபெறவுள்ளன.

மாலை 2.30 மணிக்கு ஆரம்பமாகும் முதலாவது போட்டியில் காங்கேசன்துறை யங் றோயல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து திருமலை நட்சத்திர கழக அணி மோதவுள்ளது. 3.45 மணிக்கு நடைபெறும் இரண்டாவது போட்டியில் மயிலங்காடு ஞானகலா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அளவெட்டி யுத் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

### இருதினங்களில்

டைத் துணி, பாடசாலைப் புத்தகங்கள், மற்றும் கூட்டுறவுச் சங்கங்களுக்கான உணவுப் பொருள்களும் எடுத்துவரப் படுகின்றன என யாழ் செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. [பா]

### உணவு

பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு வேண்டிய பணத்தையும் அனுப்பிவைப்பதற்கு வேண்டிய நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்காக சுமார் 50 மில்லியன் ரூபாவுக்கான வங்கிக் கட்டளை எடுக்கப்பட்டு கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படவிருக்கிறது.

மேலும் மேற்படி விடயம் சம்பந்தமாக கொழும்பு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளருடன் நேரடியாக பேசுவதற்காக யாழ். செயலக திட்டப்பணிப்பாளர் நாவலர் கொழும்பு நோக்கிப் புறப்படவிருக்கிறார். இவருக்கான போக்குவரத்து ஒழுங்குகள் குறித்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளுடன் ஏற்கனவே தொடர்பு கொள்ளப்பட்டிருக்கிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் அழைப்பை ஏற்றுக்கொள்ளவில்லை என்று கூறியுள்ளன.

### குடாநாடு

ரத் தடையை அமுல்படுத்தும் நோக்கில் யாழ்ப்பாணத்திற்கான கப்பல் சேவையை இடைநிறுத்துவதிலும் மண்ணெண்ணெய்கொண்டுவருவதற்கான அனுமதியில் கெடுபிடியையும் தபால் பைகள் பரிசோதனையில் தாமதத்தையும் சிறிலங்கா அரசாங்கம் ஏற்படுத்தி வருவதாகவும் அறியமுடிகின்றது

### பிரச்சினை

சமஷ்டிக்கு எதிரான மனநிலையில் வளர்க்கப்பட்டிருக்கும் சிங்கள மக்கள் அதனை முளையிலேயே கிள்ளிவிடுவார்கள். இந்நிலையில் தமிழ்மக்கள் எப்படி சமஷ்டி அமைப்புப்பற்றி கருத்தூன்றிச் சிந்திக்கமுடியும்.

சமஷ்டியை நான் நிராகரிக்கிறேன் அது ஒருபோதும் பிரச்சினையைத் தீர்க்கவும் மாட்டாது அமைதியைக் கொண்டு வரவும் மாட்டாது. பிரச்சினைக்கு அரசியல் தீர்வு தான் ஒரேவழி இராணுவத் தீர்வு இனப்படுகொலையில் தான் கொண்டுபோய்விடும்.

ஒவ்வொருவரும் சமாதானத்தீர்வை நோக்கி ஆக்கபூர்வமாக சிந்திக்க வேண்டும். சந்தர்ப்பத்தை சாதகமாகப் பயன்படுத்துவதும் அரசியல் லாபம் தேடநினைப்பதும் அர்த்தமுடையதாகாது.

அடுத்த தேர்தல் பற்றிய சிந்தனையை விட நாட்டுக்கு நல்லது செய்யவேண்டும் என்ற சிந்தனையுடன் சகல கட்சிகளும் செயற்படவேண்டும்" என்று தெரிவித்தார்.

### யாழ்

யும் நாளை மறுதினம் மேற்படி துறைமுகத்திற்கு வந்தடையும் என்று எதிர்பார்க்கப் படும் குமண என்ற கப்பலில் எடுத்து வரப்படும் சுமார் 2000 மெற்றிக் தொன் மா ஆகிய உணவுப் பொருள்களைப் பயன்படுத்தியே இம் மாதத்திற்கான உலர் உணவு நிவாரணம் வழங்கப்பட இருப்பதாக யாழ். செயலகத்தில் இருந்து நேற்று மாலை எமக்கு கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் குடா நாட்டிற்கான கடல்வழியான உணவு விநியோகத்தை இடை நிறுத்துவது என்ற அரசின் முடிவு பெரும் உணவு நெருக்கடியை ஏற்படுத்தும் என்று தெரிகின்றது.




## செல்வி
## கனகரத்தினம் மஞ்சுளாதேவி

தாயின் மடியில்
1968 - 04 - 07

தாயக விடிவில்
1988 - 12 - 16

அன்புக்கும் ஆசைக்கும்
ஒரே ஒரு மகளாய்
நாட்டுக்காகப் புறப்பட்டு
எட்டப்பர் கூட்டத்தின் மத்தியில்
மானத்தை காக்க வேண்டுமென்று
மஞ்சு நீ!
நஞ்சுதனை அருந்தி
உன் உயிரை மாய்த்தாயே
ஆண்டுகள் நான்கு சென்றதம்மா
உன் புன்னகை பூத்த முகமோ
எம்மை விட்டுச் செல்லவில்லை அம்மா

உன் பிரிவால் வாடும்,
தாய், சகோதரர், மாமா, மாமி,
மச்சாள்மார், மச்சான்மார், உற்றார்,
உறவினர், சினேகிதி சினேகிதர்.

அல்வாய் வடக்கு,
அல்வாய்,
நாவலடி.
[3794]


## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 15.12.92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 7122

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்;

41-2479, 41-9746, 41-7563, 40-4760, 40-3089 24-6489, 26-3617, 24-2680, 27-4239, 26-3177, 22-3611.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்!

24-9938, 26-5870, 27-6439, 24-9676, 27-1927, 27-5799, 26-5287, 41-8823, 22-4766, 24-0336, 26 5814, 27-2761, 36-3550, 26-0048